"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

சித்திரை - வைகாசி - ஆனி 2007




இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மீகக் காலாண்டிதழ்

**Commercial & Industrial Guarding**
**Call now for a free survey and quotation**

**SECURITY GUARD WANTED**

- **Retail**
- **Construction**
- **24 Hour Radio Patrols**
- **Key Holding**
- **Access Control**
- **CCTV**

# CHARTER SECURITY

A Professional Service Every Time

**1st Floor**
**Cambridge Road**
**Barking**
**Essex**
**IG11 8NR**

**Tel: 020 8507 7717**
**Fax: 020 8507 7702**

மணி 15

# கலசம்
KALASAM

ஒலி 55

E-mail: kalasam @ gmail.com
smsuk77@yahoo.co.uk

சிவமயம்

# காப்புறுதித்திட்டம்

இன்று காப்புறுதித் திட்டங்கள் ( Insurance policy) முக்கியமாகிவிட்டன. மேலை நாடுகளில் தோன்றிய இது இன்று உலகம் முழுவதும் பரவிவிட்டது. ஆயுள், வாகனம், வீடு, செல்லப்பிராணிகள், வாழ்க்கைத் தேவைகள் என நாம் பெறும் கடனுக்கும் கூட காப்புறுதிகள் செய்து கொள்ளலாம். எதிர்காலத் தேவைகள் அத்தனைக்கும் முன் கூட்டியே எம்மை நாம் தயாராக்கிக் கொள்கிறோம். உண்மையாக எமது தேவைகள் எல்லாவற்றையும் நாம் சரிபார்த்தக் கொள்கிறோமா?

அப்படி என்றால் ஏன் இன்னும் பாதுகாப்பற்ற தன்மையிலேயே வாழ்க்கை ஓடுகின்றது.? ஏன் மன உளைச்சல் மட்டும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.? எத்தனை விலை கொடுத்தாலும் பெறமுடியாத மன அமைதிக்கு என்ன வழி?

அன்று ஆற்றங்கரையிலும், குன்றக்குறிஞ்சியிலும், மலர் சோலைகளிலும், மரத்தடியிலும், கிடைத்த மன அமைதியை இன்று தேடி அலைகின்றோம். மன அமைதிக்கான எவ்விதக் காப்புறுதிகளையும் செய்து கொள்கிறோம் இல்லை.

பிள்ளைகளையும் எமது வழியிலே துரத்தித் துரத்தி முன்னேற்றம் என்கின்ற பெயரில் தள்ளிக் கொண்டிருக்கின்றோம். சற்று சிந்திப்போம்!! இத்தனை வசதிகளும் வாய்ப்புகளும் உள்ள நாட்டில் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ளும் நாம் எமது முன்னோர் காட்டிச்சென்ற நல்வழிகளையும் பின்பற்றுவோமாக. குறிப்பாக இன்றைய இளைஞர்களையும் எதிர்கால சந்ததியையும் பல பிரச்சனைகள் தாக்கித் தினறடிக்கின்றன. பணத்தாலும் விஞ்ஞானச் சாதனைகளாலும் இவற்றைத் தீர்த்து விட முடியாது.

வாழ்க்கையில் சந்திக்கப் போகும் குழப்பங்களுக்கு காப்புறுதி செய்ய வேண்டாமா? மனத்தைப் பல வழிகளிலும் குழப்பபார்க்கும் உணர்வுகள், ஊடகங்கள், காட்சிகள், காரியங்கள் இவற்றிலிருந்து விடுபட்டு எம்மைப்போல எம்மைவிட சாதனையாளர்களாக எமது பிள்ளைகள் வாழ்வதற்குக் காப்புறுதி வேண்டாமா?
ஆலயங்களும், சமயநிறுவனங்களும் சரியான வழியைச் சுட்டிக் காட்டவேண்டும். இளைஞர்கள் அவ்வழியே நடப்பதும், பெற்றோர் தம் பிள்ளைகளை அவ்வழியே அவர்களை இட்டுச்செல்வதும் அவசியம். இவ்வெண்ணத்தைக் காப்பாற்றிக்கொள்வோம்.

ச. ஆனந்ததியாகர்

கலசம் ஆசிரியர்

**நிர்வாகக் குழு**

திரு. சதாசிவம் ஆனந்ததியாகர் (**ஆசிரியர்**) திரு.சி.அற்புதானந்தன் திரு.சி.தம்பு
திரு.சு.வைத்தியநாதன் திரு.வ.இ.இராமநாதன் Dr. ந. நவநீதராசா, திரு. ம.மதிதரன்
செல்வன் லக்ஷன் தியாகராஜா, செல்வன் சுபிந்தன் சூரியகுமார்,
செல்வி அனிற்றா கனகலிங்கம், செல்வி வினோதா சிவஞானம்
**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# கருணையின் வடிவம் காஞ்சிப்பெரியவர்

ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவமிகளின் கருணையை விளக்கும் ஒரு சிறிய நிகழ்வு

பல ஆண்டுகளுக்கு முன் ஒரு சித்திரை மாதம் வருடப்பிறப்பு தினம். காலை வேளை ஸ்ரீ காஞ்சி மடத்தில் காஞ்சிப்பெரியவர் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளைத் தரிசிக்க பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. நீண்ட வரிசை. அந்த வரிசையில் பதினாறு வயது இளைஞன் ஒருவனும் காத்திருந்தான். வரிசை மெல்ல மெல்ல ஊர்ந்து பத்து மணி அளவில் காஞ்சிப்பெரியவர் அமர்ந்திருந்த மேடை அருகே வந்து சேர்ந்தான் அந்த இளைஞன். அவனைச் சற்று நேரம் உற்றுப் பார்த்தார் காஞ்சிப்பெரியவர். அவ்வளவு தான் உடனே பெரியவருக்கு முன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான். உடனே எழவில்லை. சற்று நேரம் பொறுத்துப் பாரத்த சுவாமிகள் "அப்பா குழந்தே எழுந்திரு எழுந்திரு!" என்று கட்டளை இட்டார். எழுந்தான் கைகளை மேலே கூப்பி நின்றான். பக்தி நடுக்கம் அவனிடமிருந்து அகலவில்லை. அவன் கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது. இளைஞனை அருகே கூப்பிட்டார் சுவாமிகள். கும்பிட்டபடி அருகில் சென்றான் "நீ யாரப்பா? உன் பேரென்ன? எந்த ஊரிலிருந்து வார்றே?"என்று விசாரித்தார். அந்த இளைஞன் மிகவும் அடக்கமாக வாயை ஒரு கையால் பொத்தி "ஸ்வாமி என்பேர் பாலகிருஷ்ணன் ஜோஷி, குஜராத்தி பிராமணன். மெட்ராசிலேருந்துவரேன். பூர்விகம் குஜராத்" என்று அடக்கத்துடன் சொன்னான். "மெட்ராஸ்லே எந்த இடம்? என்ன படிச்சிருக்கே?" என்று கேட்டார். ஹனுமந்நாராயணன் கோயில் தெரு எட்டாவது வரைக்கும் ஸ்வாமி" என்று அடக்கத்துடன்தயங்கி தயங்கிச் சொன்னான் ஜோஷி.

"அது போகட்டும் இன்றைக்குப் புது வருஷப்பிறப்பு என்கிறதாலே இந்த சேத்திரத்தில் இருக்கிற கோயில்கள்லே ஸ்வாமி தரிசனம் பண்ணிட்டுப் போவேம்னு வந்தாயா?" என்று விசாரித்தார். மஹாசுவாமிகள். "அப்படி இல்லை பெரியவா! பெரியவாளை தரிசனம் பண்ணிட் போணும்னு வந்தேன்."

உடனே பெரியவர் "அபசாரம் அபசாரம் ஒரு ஊருக்குப் போனா முதல் அங்கே இருக்கிற சிவ, விஷ்ணு ஆலயங்களுக்குப் போய் அவசியம் தரிசனம் பண்ணணும். நான் எந்த ஊருக்கும் போனாலும் முதல்ல கோயில்களுக்குப் போய் தரிசனம் பண்ணிவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன். என்ன புரிகிறதா?" என்று வாய்விட்டுச் சிரித்தார் சுவாமிகள்."இப்போ புரிந்து கொண்டேன்" என்று அடக்கமாக பதில் சொன்னான் ஜோஷி. உடனே மஹா சுவாமிகள் "சரி ஆசாரியாள் பிரசாதத்தை வாங்கிக்கொண்டு இந்த ஊர்ல இருக்கிற கோயிலுக்கெல்லாம் போயவிட்டு அப்புறமா மெட்ராசுக்கு பஸ் ஏறணும்! என்ன புரியறதா?" என்று சற்று அழுத்தம் கொடுத்துச் சொன்னார் சுவாமிகள்.

உடனே பலகிருஷ்ண ஜோஷி சற்றுதைரியம் வந்தவனாக "நல்லா புரியுது பெரியவா நீங்க உத்தரவு பண்ணபடியே இந்த ஊர்லே எல்லா கோயில்களுக்கும் போயிட்டு தரிசனம் பண்ணிட்டு மடத்துக்கு வந்துடறேன். அனுக்ரஹம் பண்ணனும் "என்றான்.



சுவாமிகள் சிரித்துக்கொண்டே "அதான் பிரசாதமெல்லாம் இப்பவே கொடுத்துடப் போறனே திரும்ப எதுக்கு மடத்துக்கு வரப்போறே? ஓஹோ சுவாமி தரிசனம் பண்ணிட்டு மத்யானம் மடத்துல சாப்பிட்டுட்டு பஸ் ஏறலாம் என்று முடிவு

செய்திருக்கிறாயாக்கும் பேஷ் பேஷ்'' என்று உத்தரவு கொடுத்தார் சுவாமிகள். தயங்கினான் ஜோஷி. அவன் கண்களில் நீர். “ஏன் கலங்கறே?'' பெரியவர் அன்போடு கேட்டார். உடனே ஜோஷி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு “கொஞ்ச நாள் இங்கேயே இருக்கணும்னு ரொம்ப ஆசையாய் இருக்கு. அதனாலே...'' என்று முடிப்பதற்குள், “இங்கேன்னா புரியலையே?'' என்று இடைமறித்தார் சுவாமிகள். பவ்யமாக “மடத்துலதான் பெரியவா'' என்றான். “என்ன மடத்துலயா! இங்க ஸந்நியாசிகள்னா தங்குவா. உன்னாட்டம் பசங்களுக்கு இங்க என்ன வேலை? ஸ்வாமி தரிசனம்பண்ணிட்டு ஊர் போய்ச்சேரு!..'' சுவாமிகளின் குரலில் கண்டிப்புத் தெரிந்தது.

ஜோஷி நகரவில்லை. மீண்டும் ஒரு முறை பெரியவர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து எழுந்தான். “பெரியவா அப்படிச் சொல்லப்படாது. எனக்கு மடத்திலே தங்கி உங்களுக்கு கொஞ்ச காலம் பணிவிடை செய்யணும்கிறது எண்ணம்!'' என்று கொட்டிவிட்டான்.

ஆசார்யாளுக்கு நிலைமை புரிந்தது. கள்ளம் கபடமற்ற ஜோஷியின் தோற்றமும் வெளிப்படையான பேச்சும் சுவாமிகளை வெகுவாகக் கவர்ந்தது. ஜோஷியிடம் தனி அபிமானம் சுவாமிகளுக்கு ஏற்பட்டது. இருப்பினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் “எனக்கு பணிவிடையா? இங்கு தான் மடத்துல நிறய்ய பசங்கள் இருக்காங்களே! இதுல நீ வேற என்னத்துக்கு? நீ மெட்றாஸ் கிளம்புற வழியைப் பாரு!'' என்றார் காஞ்சிப்பெரியவர். ஜோஷி அந்த இடத்தை விட்டு நகர மனமின்றி நகர்ந்தான். ஆனால் மடத்தை விட்டு நகரவில்லை.

ஜோஷி பகல் மடத்தில் சாப்பிட்டான்.
பெரியவர் தங்கி ஓய்வெடுக்கும் அறைக்கு வெளியே ஓர் ஓரமாய் உட்கார்ந்து கொண்டான். மாலை வேளை சுவாமிகள் ஸ்நானம் முடித்து வெளியே வந்தார். ஜோஷி அவர் கண்ணில் பட்டான் பெரியவர் எதுவும் பேசாமல் வேகமாகக் கடந்து சென்றார். பெரியவர் எங்கு சென்றாலும் அவர் கண்ணில் படுகிற மாதிரி நின்று பார்த்தான் ஜோஷி. நான்கு நாட்கள் விடாமல் பக்தி வைராக்கியத்தோடு முயன்று பார்த்தான் பலனில்லை!
ஐந்தாவது நாள் விடியற்காலை வேளை
ஸ்ரீகாமாட்சி அம்மன் கோயில் புஷ்கரணிக்கு அதிகாலை ஸ்நானத்துக்காகக் புறப்பட்டார் மகா சுவாமிகள். ஸ்நானம் பண்ணிக் கரையேறிய சுவாமிகள் கண்ணில் ஜோஷி பட்டான். “நீ இன்னும் மெட்ராஸ் போகலியா?'' வாஞ்சையுடன் கேட்டார்
பெரியவர்.

“இல்ல பெரியவா! நான் மெட்ராஸ்லேர்ந்து சங்கல்பம் பண்ணிக்கொண்டு வந்தது பூர்த்தியாகாமல் திரும்பிற உத்தேசம் இல்ல'' என வைராக்கியத்துடன் சொன்னான் ஜோஷி. “சாத்யமில்லாத சங்கல்பத்தை பண்ணிக் கப்படாது'' என்று சொன்ன சுவாமிகள் நடந்து போய்விட்டார்.

ஜோஷி மனம்தளரவில்லை. ஸ்ரீ காமாட்சி அம்மனை தரிசித்து விட்டு நேராக மடத்துக்குப் போனான் ஆசார்யாளின் அறை வாசலில் நின்றுகொண்டான்.
பக்தர்களின் தரிசனத்துக்காக ஸ்வாமிகள் வெளியே வந்தார். அவர் கண்ணில் ஜோஷி பட்டான். அவனைப் பார்த்தவுடன் ஆசார்யாளுக்கு மனம் நெகிழ்ந்து விட்டது. தனக்குப் பணிவிடை செய்தே தீர வேண்டுமென இப்படி ஆசையுடன் கூடிய ஒரு வைராக்கியமா! என்று ஆச்சரியப்பட்ட ஸ்வாமிகள் ஜோஷியை அருகில் அழைத்தார். “உங்கப்பாவுக்கு உத்யோகமா? வியாபாரமா?'' என்று கேட்டார் ஸ்வாமிகள்.
“வியாபாரம் தான் பெரியவா. வைரம் வாங்கி விக்கிறது.'' என்று பதில் சொன்னான் ஜோஷி. “உன்னோட குணத்துக்கு பிற்காலத்திலே நீயும் பெரிய வைர வியாபாரியா வருவே. அப்போ நீ நேர்மையான வைர வியாபாரிங்கற பேரை வாங்கணும்! சரி.. சரி! உன் ஆசைப்படியே கொஞ்ச நாள் மத்த பசங்களாட்டம் கூட இருந்து பணிவிடை பண்ணிட்டுப் போ!'' என பச்சைக் கொடி காட்டிவிட்டுப் போனார் சுவாமிகள்.

சுவாமிகளுக்கு பணிவிடைசெய்யும் நான்கைந்து இளைஞர்களோடு ஜோஷி சேர்ந்தான். ஆசார்யாளை தரிசித்துக் கொண்டே இருப்பது, சொன்ன பணிவிடைகளைச் செய்வது என இரண்டு நாட்கள் நகர்ந்தன. அந்த இரண்டு நாட்களும் இரவிலும் ஆசார்யாள் படுத்த அந்த அறையிலேயே ஓர் ஓரமாக மற்ற பையன்களுடன் ஜோஷிக்கும் படுக்கை. இதைப் பரம பாக்கியமாகக் கருதினான் ஜோஷி.

மூன்றாம் நாள் இரவு படுக்கப் போகுமுன் ஆசார்யாள் ஜோஷியை அருகே வரச்சொன்னார். ஆசார்யாளை வணங்கி எழுந்தான். “பாலகிருஷ்ண ஜோஷி... நீ இனிமே ஒரு கார்யம்

பண்ணி ஆகணும்! பகல் பூரா எங்கூட இருந்து மத்தவா மாதிரி பணிவிடை பண்ணு. ராத்திரி வேளையிலே மாத்திரம் நீ இங்க படுக்க வேண்டாம்!'' என்று சொல்லி முடிப்பதற்குள், ஜோஷி பதற்றத்துடன், "பெரியவா அப்படி ஒரு உத்தரவு போடப்படாதுன்னு பிரார்த்திக் கின்றேன்! நானும் மத்தவா மாதிரி நீங்க இருக்கற இந்த ரூம்லேயே படுத்துக்கறேன். கிருபை பண்ணனும்!'' என்று கண்களில் நீர் மல்க கெஞ்சினான். சுவாமிகள் "நா காரணமாகத்தான் சொன்றேன்! நீ கேக்கணும்'' என்று குரலில் சற்றுக் கடுமை காட்டினார். ஜோஷி "சரி பெரியவா நீங்க சொல்றபடியே செய்யறேன்'' என்று அழுகையைச் சமாளித்துக் கொண்டு பேசினான்.

உடனே பெரியவர் சிரித்துக்கொண்டே "அப்படிச்சொல்லு ராத்திரி நேரா சமையல் கட்டுக்குப் போ! அங்கே பெரிய கோட்டை அடுப்புக்குப் பக்கத்தில் ஒரு மர பெஞ்சு கிடக்கும்! அதுலே சௌக்யமா படுத்துத் தூங்கு. விடியகாலம் எழுந்து பல்தேச்சு, ஸ்நானம் பண்ணிட்டு இங்க கைங்கார்யத்துக்கு வந்துடு... என்ன புரியறதா?'' என கறராகக் கட்டளையிட்டார்.

ஜோஷியால் மேற்கொண்டு எதுவும் பேசமுடியவில்லை. கண்களின் நீரைத் துடைத்துக்கொண்டு "நீங்க சொன்னபடியே பண்றேன் பெரியவா!'' என்று நகர்ந்தான். மற்ற பையன்களெல்லாம் இதை வேடிக்கை பார்த்தனர். தன்னை மட்டும் பெரியவா ஏன் கோட்டை அடுப்பங்கரையில் போய் படுக்கச் சொன்னார் என்ற கேள்விக்கு அவனால் விடை காணமுடியவில்லை.

ஜோஷி வெளியே வந்ததும் மகா சுவாமிக்கு பணிவிடை பண்ணும் ஓர் இளைஞன் எதிர்ப்பட்டான். அவனை அழைத்த ஜோஷி "ஏம்பா! உங்கள்ல யாரையாவது பெரியவா இதுவரைக்கும் ராத்திரியிலே கோட்டை அடுப்பங்கரையிலே போய் படுத்துத் தூங்கச் சொல்லியிருக்காளா?'' என்று ஆர்வமுடன் கேட்டான்.

உடனே அந்த இளைஞன் முகத்தைச் சுளித்தவாறு, "சேச்சே! எங்க யாரையும் பெரியவா இதுவரை அப்படிச் சொன்னதே இல்லை!'' என நகர்ந்தான்.

ஜோஷிக்கு அவமானமாக இருந்தது. அப்போது இரவு பத்து மணி. கேவிக் கேவி அழுது கொண்டே வெறிச்சோடிக்கிடந்த சமையலறைக்குள் நுழைந்து, பெரியவர் சொன்னபடி கோட்டை அடுப்பருகே கிடந்த மர பெஞ்சில்படுத்தான். அவன் இரவு ஒன்றும் சாப்பிடவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. நெடுநேரம் கழித்துக் கண்ணயர்ந்தான். பொழுது புலர்ந்தது. மடம் விழித்துக்கொண்டது. மடத்துக்கே உரிய வேதபாராயணங்களும், பஜனைப் பாடல்களும் இதமாகக் காற்றில் மிதந்து வந்தன!

ஜோஷி விழித்துக் கொண்டான். பல் துலக்கி ஸ்நானம் பண்ணிவிட்டு நேராகக் காமாட்சி அம்மன் கோயில் சந்நிதியில் போய் உட்கார்ந்து விட்டான். பெரியவரின் பணிவிடைக்குப் போக வேண்டுமென்று அவனுக்குத் தோன்றவில்லை. மதியம் மடத்துக்கு வந்தான். சாப்பிட்டான். மீண்டும் மாலை காமாட்சி அம்மன் சந்நிதி. இரவு பத்து மணிக்கு மடத்து சமையல் கட்டில் கோட்டை அடுப்பு பெஞ்சில் படுக்கை பெரியவரிடமே போகவில்லை. இப்படி இரண்டு நாட்கள் நகர்ந்தன. மூன்றாம் நாள் கலை மகா சுவாமிகள், தனக்குப் பணி விடை செய்யும் இளைஞன் ஒருவனை அருகில் அழைத்தார். அவனிடம் கலையோடு "ஏண்டாப்பா! ரெண்டு நாளைக்கு முன்னாடி பாலகிருஷ்ண ஜோஷினு ஒரு பையன் சேவை பண்ண வந்தானே... அவனைக் காணலியே! எங்க போய்ட்டான்? ஒரு வேளை சொல்லிக் கொள்ளாம மெட்ராசுக்குப் போயிட்டானோ?'' என்று வினவ-னார்.

உடனே அந்த இளைஞன் தயங்கியபடி "இல்லே பெரியவா மடத்துலதான் இருக்கான்!'' " பின்னே ரெண்டு நாளா ஏன் இங்கே வரலே?'' "தெரியலியே பெரியவா...'' அதற்குள் மற்றொரு பையன் அங்கு வரவே, அவனை அருகில் அழைத்த பெரியவா,
"உனக்கு ஏதாவது தெரியுமோ? அந்த குஜராத்திப் பையன் ரெண்டு நாளா ஏன் இந்தப் பக்கமே வரலே?'' என்றார் ஆதங்கத்துடன்.
"தெரியல்ல பெரியவா!'' அவன் சொன்னான்
"சரி..சரி.. அந்த ஜோஷியைப் பார்த்து நா உடனே வரச்சொன்னதா தெரிவி..'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றார் சுவாமிகள். மகா சுவாமிகளுக்கு முன் வந்து கூனிக்குறுகி நின்றான் ஜோஷி!

"வா குழந்தே.. எங்க ரொண்டு நாளா உன்னை இந்தப் பக்கமே காணலை? உடம்பு கிடம்பு சரி இல்லியா?'' அன்புடன் விசாரித்தார் பெரியவர்.

கைகூப்பி நின்ற ஜோஷியிடமிருந்து பதில் இல்லை!

"என்கிட்ட ஏதாவது வருத்தமோ..
கோபமோ?"என்று முகத்தில் சந்தோசம் தவழ குழந்தைத் தனமாகக் கேட்டார் சுவாமிகள். ஜோஷி மெதுவாக வாய் திறந்தான். "கோபமெல்லாம் இல்ல
பெரியவா! மனசுக்குக் கொஞ்சம் வருத்தம்" என்று தட்டுத் தடுமாறிச் சொன்னான்.

பெரியவர் ஆச்சரியத்தோடு ஜோஷியைப் பார்த்து "வருத்தமா... எம்பேர்லயா?" என்று கேட்டார். ஜோஷி பதில் கூறவில்லை. மௌனம் காத்தான். பெரியவர் விடவில்லை. "சொல்லு சொல்லு உன் வருத்தத்தை நானும் தெரிஞ்சுக்கணு ம் இல்லையோ..."என்று உற்சாகப்படுத்தினார். மற்ற பையன்கள் அனைவரும் கைகட்டி நின்றிருந்தனர்.

பெரியவரை வணங்கிவிட்டு ஜோஷி வாய் பொத்திப் பேச ஆரம்பித்தான். "வேற ஒண்ணுமில்லே பெரியவா! முதல் ரெண்டு நாள் என்னையும் ராத்திரியிலே மத்த பையன்களோடு இங்கேயே படுத்துக்கச் சொல்லி உத்தரவு பண்ணினேள். சந்தோசமாக படுத்துண்டேன். திடீர்னு முந்தாநாள் ராத்திரி கூப்பிட்டு,கோட்டை அடுப்புக்குப் பக்கத்திலே பெஞ்சுலே போய்ப் படுத்துக்கோன்னு உத்தரவு பண்ணிட்டேள்! நா இவாள மாதிரி இந்தப் பக்கத்து பிராமணனா இல்லாம குஜாராத்தி பிராமணனா இருக்கறதாலே என்னை அங்கே போய்ப் படுத்துக்கச் சொல்லிட்டேளோன்னு எம் மனசுக்குக் கஷ்டமாயிடுத்து! அதனாலதான் ரெண்டு நாளா இங்கே வரலை. என்னை மன்னிச்சுடுங்கோ பெரியவா...." கதறி அழுதபடியே பெரியவாளின் கால்களில் விழுந்தான் ஜோஷி.

நிலைமையைப் புரிந்து கொண்டார் சுவாமிகள். சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. அங்கு அமைதி நிலவியது. பின்பு அங்கு நின்று கொண்டிருந்த மற்ற பையன்களை வெளியே போகச்சொன்னார் சுவாமிகள். ஜோஷியை அழைத்தார் பரம கருணையுடன் "அடாடா.. பாலகிருஷ்ணா..நா உன்னை கோட்டை அடுப்புகிட்ட பெஞ்சிலே படுத்துத் தூங்கச் சொன்னதுக்கு நீ இப்படி அர்த்தம் பண்ணிட்டியா! அடப் பாவமே..நா அப்படி எல்லாம் நினைச்சுண்டு அதைச் சொல்லலேப்பா! சின்னப் பையன்...தப்பா புரிஞ்சுண்டிட்டியே" என்று ஜோஷியை கீழே உட்காரச் சொன்னார் பெரியவர். தயங்கியபடியே அமர்ந்தான்.

உடனே பெரியவர் கருணை ததும்பும் குரலில் "உன்னைமட்டும் சமையலறை கோட்டை அடுப்புகிட்டே மர பெஞ்சுலே படுத்துக்கச் சொன்னதுக்கு, நீ மனசுலே போட்டு வச்சுண்டு இப்போ சொன்னியே... அந்த விசேட காரணமெல்லாம் இல்லவே இல்லேடா ஜோஷி. அதுக்கு ஒரே ஒரு காரணம்தான்.. இதோ பார்றா ஜோஷி!" என்று தான் இடையில் அணிந்திருந்த வஸ்திரத்தை தொடை வரை நகர்த்திக் காண்பித்தார் சுவாமிகள். ஆசார்யாளின் சிவந்த தொடைகளில் அடை அடையாகக் கொசு கடித்த தழும்புகள்! "குழந்தே ஜோஷி! இதெல்லாம் என்னன்னு தெரியறதா உனக்கு? ராத்ரி வேளையிலே கொசு கடிச்ச தழும்புகள்! நா ஒரு சந்நியாசி, இதைப் பொறுத்துண்டு இருந்திடுவேன். நீ குழந்தை! ரொம்பவும் கஷ்டப்படுவே! ரெண்டு நாள் ராத்திரி நீ கொசுக்கடியிலே சிரமப்பட்டதைப் பார்த்தேன். என்னாட்டம் உனக்கும் சிகப்பு உடம்பு! அவஸ்தைப்படாமல் நீயாவது சௌக்யமாக தூங்கட்டுமேனுதான் பத்திரமான இடத்துக்கு உன்னைப் போகச்சொன்னேன்.! கோட்டை அடுப்புக்குப் பக்கத்தில் அந்த பெஞ்சு கிடக்கிறதாலே உஷ்ணத்தில் அங்கே கொசுவே வராது! நல்லா தூங்குவே! அதானாலே தான் அப்படிச் சொன்னேன். நீ என்னடான்னா வேற விதமா... விபரீதமா நினைச்சிட்டியே!" என்று பெரியவர் சிரித்துக்கொண்டே சொன்னது தான் தாமதம்! ஓ என்று கதறி அழ ஆரம்பித்து விட்டான் ஜோஷி!

"பெரியவா என்னை மன்னிச்சேன்னு சொல்லுங்கோ! உங்க கருணையைப் புரிஞ்சுக்காம நா ஏதோதோ உளறிட்டேன்!" என விம்மனான் ஜோஷி! அந்தக் காருண்ய மூர்த்தி சிரித்துக் கொண்டிருந்தார். தன் கைகளை உயர்த்தி பூரணமாக பாலகிருஷ்ண ஜோஷியை ஆசீர்வதித்தது அந்த தெய்வம்!

"ஜோஷி! பிற்காலத்தில் நீயும் சிறந்த வைரவியாபாரியா விளங்குவே! நியாயமான விலைக்கு வித்து நல்லபடியா வியபாரம் பண்ணு!" என்று மனப்பூர்வமாக ஆசீர்வாதம் பண்ணினார் மகா சுவாமிகள்!

பிற்காலத்தில் சுவாமிகள் வாக்குப்படியே நியாயம், தர்மம் வழுவாத பெரிய வைர வியாபாரியாக விளங்கினார் பாலகிருஷ்ண ஜோஷி (சமாதி) காலம் வரையிலும் அவரது பூரண அன்புக்குப் பாத்திரமாக விளங்கினார். சில ஆண்டுகள் கழித்து ஜோஷியும் இறைவனடி சேர்ந்தார். **

# ஈழத்து பொலிகண்டி கந்தவனமும்-சிக்கல் சிங்காரவேலரும்

இலங்கையில் முருகப் பெருமானின் அருளொளி வீசும் தலங்களில் கந்தவனமும் சிறப்புடைய ஒன்று. இது அருணகிரிநாதரால் "உறவுசிங்கிகள்.." என்று தொடங்கும்



திருப்புகழால் பாடப்பெற்ற உயர்ந்த குகஸ்தலம். ஈழத்து ஆறுபடை வீடுகளில் இதுவுமொன்று. கந்தவனககடவை, கந்தவனம், கந்தாராண்யம், கந்தசுவாமி கானகம், முருகவனம் எனப்பல பெயர்களால் அழைக்கப்படும் இத் திருக்கோயில் யாழ்ப்பாணத்தின் வடகரையில் பொலிகண்டி எனும் சிற்றூரில் இயற்கையெழில் சூழ அமைந்துள்ளது.

இலங்கையில் இங்கே மட்டுமே மூலவர் வள்ளி தெய்வானையுடன் கூடிய ஷண்முகராகக் காட்சி அளிக்கின்றார். தலவிருட்சம் வன்னி. தீர்த்தம், நறுநீர்க்கேணி, மூர்த்தி தலம் தீர்த்தம் எனும் முச்சிறப்புக்களும் அமையப்பெற்ற இக்கோயில் மிகவும் புராதனமானதாகும். கந்தபுராணம் தோன்று முன்பே இக்கோயில் தோற்றம் பெற்றுள்ளது. ஏனெனில் கந்தபுராணத்தின் ஒரு பகுதியாகிய தட்சிணகைலாய மான்மியத்தில் இக் கோவிலைப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. இக்கோவிலின் தோற்றம் பற்றிக் கூறப்படுவதாவது:

முருகப் பெருமான் சூரனாதியர்களை அழித்து தெய்வானை வள்ளிஆகிய சக்திகளை மணந்த பின் பல தலங்கள் சென்று வேதாரண்யத்தை அடைந்து அங்கிருந்து வீரவாகுதேவர் உட்பட இலக்கத்தொன்பது வீரர்கள், கின்னரர், கிம்புருடர், சப்தரிஷிகள் தேவர்களுடன் கதிர்காமம் செல்வதற்காக மரக்கலமேறிக் கடல் கடந்து கங்கேயன்துறையடைந்து பின்பு அங்கிருந்து மரக்கலமேறி வந்துபொலிகண்டி கரையை அடைந்து அங்கு சூமிவனமாயிருந்த(வன்னிவனம்) இடத்தின கண் கோயில் கொண்டெழுந்தருள விரும்ப விசுவகன்மாவை நோக்கி"இங்கே அழகிய கோயில் ஒன்று இயற்றுக" எனப் பணிக்க அக்கணமே விசுவகன்மாவும் ஆகமவிதிப்படி அழகிய கோயிலை அமைத்ததாகவும் அப்போது முருகப்பெருமான் தேவியருடன் அங்கு எழுந்தருளி பிரம்மா, மகாவிஷ்ணு, இந்திரன் முதலாகிய தேவர்கள் முருகப்பெருமான் கடல் மார்க்கமாக மரக்கலப் பிரயாணம் செய்த தோஷம் நீங்கும்படியாக வெகுவிமரிசையாக மகாபிஷேகம்செய்து வழிபட குகப்பெருமான் அவர்களுக்கு அருள் மழை பொழிய அவ்வன்னிவனம் அன்று முதல் "கந்தவனம்" என்ற திருப்பெயருடன் சிறந்து விளங்கியதாகவும் கூறப்படுகின்றது. இங்கிருந்து முருகப்பெருமான் கடல் மார்க்கமாகப் புறப்பட்டு கோணமலையை அடைந்து அதன் பின்பு கதிர்காமம் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இத்திருத்தலத்தில் உள்ள சுவாமி கல்யாண வேலவராவர். இங்குள்ள பழைய மூலவராகிய "பழையவர்" என அழைக்கப்படும் அழகிய ஷண்முகர் சோழர் காலத்தில் வடிக்கப்பட்ட விக்கிரகமாகும். சோழர் காலத்தில் முத்தாரசோழன் எனும் சோழமன்னனின் ஆட்சியில் சில்ப்ப முனிவர் என அழைக்கப்பட்டு வந்த முருக பக்தராகிய சிற்பி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிக்கலில் கருங்கல்லில் அழகிய ஷண்முக

வடிவத்தை செதுக்கி வடித்தார். அதனழகைக் கண்டு எல்லோரும் ஆனந்தித்து மகிழ்ந்தனர். அதிக மகிழ்ச்சியால் அம்மன்னன் சிறுநோக்கம் கொண்டவனாகி இச்சிற்பி இதே போல் வேறு சிற்பம் செய்வானாகில் தனது ஊரின் கண்ணுள்ள இவ்விக்கிரகத்திற்கு நிகராகிவிடுமே என்றெண்ணி அச்சில்பமுனிவரின் பெருவிரலைத் தானமாகப் பெற்றுவிட்டான். ஆனாலும் அச்சிற்பி மனங்கலங்காது முருகப்பெருமானை நினைந்த வண்ணம் எட்டுக்குடி சென்று அங்கும் அழகிய ஷண்முகப்பெருமானை வடித்தார். அங்கும் அவ்வூர் மக்கள் மன்னனின் சிந்தனை போல் தாமும் பொறாமை கொண்டவர்களாகி அச்சில்ப முனிவரின் கண்களைப் பிடுங்கி எடுத்தனர். முருகப்பெருமானின் திருவிளையாடல் என எண்ணிக்கொண்ட சில்பமுனிவன் என்கண் சென்றது என்று சற்றும் மனம் நெகிழாது ஓர் சிறுமியின் உதவியுடன் ஷண்முகப்பெருமானை செதுக்கும் போது உளிதவறி அவரின் கையில் பட்டு கையை ஊனப்படுத்தியதால் அதிலிருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்து கண்ணில் பட சில்பமுனிவர் கண்பார்வை பெற்றார். அச்சில்ப முனிவரால் இன்னொரு விக்கிரகம் அமைக்கப்பட்டது. அவ்விக்கிரகம் கடல் மார்க்கமாக குமாரபுரத்தை அடைந்து அங்கு வைத்துப் பூஜிக்கப்பட்டதாகவும் போத்துக்கேயர் காலத்தில் அவ்விக்கிரக்ம் கந்தவனத்திற்கு கொண்டுவரப்பட்டு பூஜிக்கப்பட்டு வந்ததாகவும் கூறுவர். இச்சில்ப்ப முனிவரால் வடிவமைக்கப்பட்ட சிக்கல் சிங்காரவேலர், எட்டுக்குடி வேலர், எண்கண்வேலர்,கந்தவனத்துக் கல்யாண வேலர் ஆகிய நால்வரும் ஒரே அமைப்பையுடைவர்கள். அதாவது இந்திரமயில் இடது புறம் திரும்பி நிற்க அதில் ஆறுமுகப்பெருமான் பன்னிருகரங்களுடன் அமர்ந்திருக்க அருகில் இருபுறமும் தேவியர்கள் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றனர். இவ்விக்கிரகங்கள் நான்கிலும் ஆறுமுகனுடன் சேர்ந்து திருவாசியும் செதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கந்தவனத்தில் வைத்துப் பூஜிக்கப்பட்ட ஷண்முகரால் கோயிலும் ஊரும் சிறந்து விளங்கின. பலர் இவ்விறைவனை வேண்டித் தவமிருந்து தாம் விரும்பியதைப் பெற்றனர். இக் கோயிலிற் பூசை செய்த குருக்கள் அபிசேகம் செய்யும் போது அபிசேகக்குடம் தவறி விழுந்து சுவாமியின் இடது புற வரதகரத்தை ஊனப்படுத்தியது. இதனால் இவ்விக்கிரகத்தை கடலில் இடுவதற்கு எண்ணியபோது முருகப்பெருமான் பக்தர் ஒருவரிற்கு கனவில் தோன்றி தம்மைக் கடலில் இடவேண்டாமென்றும் தம்மை ஆலய உள்வீதியிலுள்ள வன்னிமர நிழலில் பிரதிட்டை செய்யுமாறும் கட்டளையிட அதே போல் இப்பழையவர் வன்னிமர நிழலில் கோவிலமைக்கப்பட்டு பிரதிட்டை செய்யப்பட்டார். கும்பகோணத்திலிருந்து இதே போல் அமைப்புடைய மிகவும் பிரம்மாண்டமான ஷண்முக விக்கிரகம் கொண்டுவரப்பட்டு மூலவராக வைத்து வழிபடப்படுகிறது. இச்சம்பவம் 1905 ஆம் ஆண்டளவில் நடை-பெற்றது.

இதே போல் இங்குள்ள ஆறுமுகநயினார் என அழைக்கப்படும் எழுந்தருளி ஷண்முகர் இத்தலத்திற்கு கிடைக்கப்பெற்றது மிகப் பெரும் வரப்பிரசாதமாகும். அழகிய வடிவத்திலும் மிகப்பெரிய உருவத்திலும் சிறந்த அருளிலும் தனக்கு நிகரில்லாமல் அமையப்பெற்ற திவ்விய ரூபமுடையது. இச்சண்முகரைப்போல இந்தியாவிலோ இலங்கையிலோ பெரிதாகவும், அழகியதாகவும் அமையப் பெறவில்லை. இச் ஷண்முகர் 1928 ஆம் ஆண்டளவில் இவ்வாலயத்தின் தெற்கு வீதியில் வைத்து வார்ப்பிக்கப்பட்டதாகும். அதாவது அப்போது இத் திருக்கோயிலைப் பராமரித்து வந்த அதீனகர்த்தர் திக்கம் செல்லையாபிள்ளை தலைமை வகிக்க பொலிகண்டி மக்கள் பலரும் சேர்ந்து இந்திய, இலங்கைச் சிற்பிகளால் இத்திருவுருவம் கருக்கட்டி பஞ்சலோகத்தால் வார்ப்பிக்கப்பட்டது. இதன் போது முருகப் பெருமானின் திருவருளால் அங்கு கூடியிருந்த பலர் தாமணிந்திருந்த பல ஆபரணங்களையும் (தாலி ஈறாக) தமை மறந்து அப்பஞ்சலோகத்தில் சேர்ப்பித்தனர் என்பது நெகிழ்ச்சிக்குரியது.

பல பெருமைகளைத் தமக்குள் கொண்ட இச் ஷண்முகர் பவனி வருவது தேரிற்கும், சூரன்போர் உற்சவத்திற்கும் மட்டுமேயாகும்.

ஏனைய தினங்களில் முத்துக்குமார சுவாமியும், கார்த்திகேயரும் எழுந்தருளுவர். ஆனி மாதம் மகோற்சவம் 15 தினங்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14ஆம் நாள் தேர்த்திருவிழாவும் 15ஆம் நாள் தீர்த்தத் திருவிழா கந்தவனப் பெருமானிற்குச் சொந்தமான ஊரணி சமுத்திரக் கரைக்குச் சென்று நடைபெற்று மாலை கொடியி-றக்கத்துடன் திருவிழா நிறைவு பெறும். அதே போல் கந்தஷஷ்டித் திருவிழாவிலும் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி நான்காம் நாள்

தாரகாசுர சம்காரமும், 5ஆம் சிங்கமகாசுர சம்காரமும், 6ஆம் நாள் சூரன் போரும் நடைபெறும். இலங்கையில் இங்கேயே சூரன் போர் உற்சவம் வெகுசிறப்பாக இடம்பெறுவது என்பது குறிப்பிடத்தக்கது. மாதாமாதக் கார்த்திகை உற்சவத்திற்கு கார்த்திகேய சுவாமி வெளிவீதி உற்சவமும்ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உள்வீதி உற்சவமும் நடைபெறுவதோடு திருவாதிரை, மானம்பூ, தைப்பூசம், மாசிமகம், ஆவணிச்சதுர்த்தி என்பவற்றிற்கு சுவாமிகளின் உற்சவங்கள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தன் சிறப்புக்கள் பல அவற்றில், ஒன்று ஆலயத் தீர்த்தமாகிய நறுநீர்க் கேணியாகும். முற்காலத்தில் இக் கேணியின் நடுவிலுள்ள கல்லில் கற்பூரம் விளைந்ததாகக் கூறப்படுகிறது. நோயுற்ற பலர் இந்நறுநீர்க்கேணியில் நீராடியும் அந்நீரை அருந்தியும் சகல ரோகங்களும் நீங்கப்பெறுவது இன்றுமுண்மை. சிலநூறு வருடங்களுக்கு முன் உடுப்பிட்டியூரைச் சேர்ந்த சிவசம்புப் புலவர் என்ற மகானிற்கு கண்பார்வை அற்றுப்போகவே அப்புலவர் முருகனை நினைத்து வருத்தப்பட அவரின் கனவில் கந்தவனப்பெருமான் தோன்றி கந்தவனத்திற்கு வந்து நறுநீர்க்கேணியில் நீராடி தம்மைப் பணிந்து நான்மணிமாலை பாடுமாறு பணித்தார். அவ்வாறே அப்புலவர் அந்நறுநீர்க்கேணியில் நீராடி நான்மணிமாலை பாடவும் கண்பார்வை கிடைத்ததாம்.

அதே போல் குழந்தை அற்றவர்க்க அக்குழந்தைப் பாக்கியமருளும் மகோன்னத திருத்தலமாகவும் இத்திருப்பதி விளங்குகின்றது. சிறிது காலத்தின் முன் ஆலயத் தெற்குப்புற வீதியில் "காஞ்சிமா"என அழைக்கப்பட்டு வந்த மாமரம் ஒன்று கனிகளைத் தந்து வந்தது. அக்கனியை உண்டு கந்தவனப் பெருமானை நினைத்து விரதமிருப் பவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டியது யாவரும் அறிந்தது. காலத்தினால் முதுமையடைந்த அக்காஞ்சி மா பட்டுப்போக அதன் கன்றுமரம் உள் வீதியின் வடமேற்கு மூலையில் நின்று இன்றும் அக்கருமத்தை நிறைவேற்றி வருகின்றது. சைவப்பெரியர் சிவபாதசுந்தரனாரின் பெற்றோர்கள் இக்கந்தவனத்திலேயே தவமிருந்து அவரை முருகனருளால் பெற்றனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இத் திருக்கோவில் பூசை முறைகள் அனைத்தும் திருச்செந்தூர் முறைப்படியிலானதாகும். ஏனெனில் திருச்செந்தூரிற்கும் கந்தவனத்திற்கும் முக்கிய தொடர்புண்டு. பாக்குநிரிணைக் கடலின் வடபுறத்தே திருச்செந்தூர் போன்று தென்புறத்தே கந்தவனமும் கடலலைகள் அடிவருட இயற்கை எழில் சூழ அமையப்பெற்றுள்ளது. முருகப் பெருமான் திருச்செந்தூரில் நின்று சூரனுடன் போர்புரிந்த காலத்தில் கந்தவனத்தில் பாடிவீடமைத்து இருந்ததாகவும் இந்தியாவிலுள்ள ஆறுபடை வீடுகளிற்கும் இக்கோவில் ஓர் பாடிவீடாக அமையப்பெற்றதாகவும் புராணக் கதைகள் கூறுகின்றனர்.

இத்திருக்கேயில் பூசைகள் நவிண்டிற் பிராமண குலத்தவர்களால் பலதலை முறையாகச் செய்யப்பட்டு வருகின்றன. தினமும் ஐந்து காலப்பூசைகள் நடைபெறுகின்றன. இக் கோவில் மீது பல மகான்களும் புலவர்களும் கல்விமான்களும் பிரபந்தங்கள் பல பாடியுள்ளனர். அவ்வகையில் அருணகிரிநாதர் திருப்புகழும், உடுப்பிட்டி சிவசம்பு புலவர் நான்மணிமாலையும், நவாலியூர் சோமசுந்தரப்புலவர் நான்மணிமாலையையும் பாடி அருள் பெற்றுள்ளனர். மேலும் பலர் தனிப்பட்ட பல பாடல்கள் பாடியுள்ளனர்.
யாழ்ப்பாணத்துச் சித்தர்களும் யோகிகளும் இக்கேயிலில் வழிபட்டு அற்புதங்கள் பல நிகழ்த்தியுள்ளனர். அவ்வகையில் செல்லப்பா சுவாமிகள் "ஓடுங்கடா ஓடுங்கடா கந்தவனத்தில் நல்ல சரக்கிருக்குது" என்று கூறித் தம் சீடர்கள் பலரை இங்கே யாத்திரை செய்ய ஏவியுள்ளார். அதே போல சிவயோகசுவாமிகளுக்கும் கந்தவனத்திற்கும் பல தொடர்புகள் இருந்துள்ளன. யோகசுவாமிகள் தம் சீடர்களுடன் கால் நடையாக யாத்திரை செய்து இங்கு வந்து கந்தப்பெருமானை வழிபடுவார். 1940ஆம் ஆண்டளவில் சுவாமிகள் கோயில் வந்தபோது இங்கு கோயில் நித்திய மேளத்திற்கு இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்டு நியமித்திருந்த வடிவேலு எனும் நாதஸ்வர வித்துவானை அழைத்து பஜனை படிக்குமாறு கூறி தாமும் சேர்ந்து பஜனை பாடினார். இங்கே பஜனை முறையைத் தொடக்கியவர் இவரே. அப்போது கோவிலைப் பராமரித்து வந்த சைவப் பெரியார் திக்கம் செல்லையாபிள்ளை ஓர் நாள் திருத்தணிகைப் புராணம் படித்துக்கொண்டிருந்த போது பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை உட்பட்டவர்களுடன் வந்து தமக்கு வணக்கம் செலுத்திய செல்லையாபிள்ளையை உட்கார்ந்து படிக்கச் சொல்லித்தாமும் இருந்து அப்புராணத்திற்கு பயன் சொன்னதும்

இனிமையான சம்பவமாகும்.

சிவயோக சுவாமிகள் கந்தவனத்தில் "ஆடுமயிலே" என்ற பாடலைப் பாட மயில் ஆடிய அற்புதம் நிகழ்ந்தது. சுவாமிகள் கந்தவனத்திற்கு வரும் போதெல்லாம் பலர் சுவாமியைத் தரிசிக்கக்கூடுவது வழக்கம். அவ்வாறு கூடுபவர்களுக்குள்ள குறைகளை நீக்கி ஆசிகள் வழங்குவது சுவாமியின் வழக்கம். அவ்வகையில் கந்தவன ஆதீனகாத்தர் செல்லையா பிள்ளையின் பாரியார் நெடுங்காலமாக ஓர்வகையான வயிற்றுவலியால் அவதிப்பட்டுவந்தார். இதனால் சுவாமி கோயிலுக்கு வந்த சமயம் அவரைத் தரிசிப்பதற்காக பெரிய தேரடியில் அம்மாது வயிற்று உபாதையுடன் அமர்ந்திருந்தார். இதனைக் குறிப்பாலுணர்ந்த சுவாமிகள் அவ் வயிற்று வலியைத் தாமே வாங்கி மிகவும் வேதனைப்பட்டுத் தெளிந்தார். அன்றிலிருந்து திருவாட்டி செல்லையாபிள்ளைக்கு இறக்கும் வரையில் வயிற்று வலி வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல அற்புதங்களை இங்கே நிகழ்த்திய யோகசுவாமிகள் செல்லையாபிள்ளை வீட்டில் தம் சீடர்களைக் கொண்டு தோட்டம் செய்வித்தார் என்பதும் குறிப்பிடற்பாலது.

இவ்வாறு நயினாதீவு சுவாமிகள் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் போன்ற பெரியவர்கள், மகான்கள், சித்தர்கள் எனப்பலர் இத் திருக்கோயிலில் தங்கித் தமது தவ வாழ்க்கையை மேற்கொண்டு சிறப் பெய்தியுள்ளனர். இத்துணைப்பல சிறப்புக்களைப் பெற்று விளங்கும் பொலிகண்டி கந்தவனத்தை திருவாளர் திக்கம் செல்லையா பிள்ளை குடும்பத்தவர்கள் பரம்பரையாகப் பரிபாலித்து வருவதோடு ஆலயத்தின் பழமையும் சிறப்பையும் மிகவும் பேணிப்பாதுகாத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சகலவிதமான சிறப்புக்களையும் பெருமையையும் பெற்ற இத்திருக்கேவிலின் அழகையும் இங்குள்ள கந்தவனப் பெருமானின் அருளையும் நாம் தரிசித்துப் பெருவாழ்வு பெறுவோமாக.

**நன்றி: சிவதொண்டன் வெளியீடு**
**குறிப்பு: இவ்வாலயத்தின் புகைப்படங்கள் அனுப்பினால் எமது அடுத்த இதழில் வெளிவரும்.**

## 36-தத்துவங்கள் விளக்கம்

ஐம்பூதங்கள் மண், நீர், நெருப்பு(தீ) காற்று (வாயு) ஆகாயம் (வான்)

**தன்மாத்திரைகள்:** சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

**கன்மேந்திரியங்கள்:** கை-பாணி, கால்-பாதம், வாய்-வாக்கு, எருவாய்-குதம், கருவாய்-உபத்தம்.

**ஞானேந்திரியங்கள்:** மூக்கு, நாக்கு, காது, தோல், கண்.

**அந்தக்கரணங்கள்:** மனம், புத்தி, அகங்காரம், சித்தம்.

**வித்தயா தத்துவங்கள்:** காலம், நயதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை

**சிவதத்துவங்கள்:** சுத்தவித்தை, ஈஸ்வரம், சதாசிவம், சக்தி(விந்து) சிவன் (நாதம்) ஆக தத்துவங்கள் முப்பத்தாறும் விரி-வடைந்து செல்கின்றன.

**எல்லாவற்றையும் நமக்குக் கொடுத்தவன் இறைவன். நாம் காணிக்கையாக அவனுக்கிக்கும் பொருள்கள் எல்லாமே அவன் நமக்கு தந்தவைதான். எல்லோருக்குமாக அவன் படைத்து வைத்துள்ளதை பிறர்க்கு அளிக்கக் கூடிய வாய்ப்பினை இறைவன் நமக்களித்திருக்கிறன்.**

**God has bestowed upon us innumerable gifts. Whatever we offer to him already belongs to him. He has given us the privilege of sharing his wealth with others.**

**ஐம்புலன்களின் ஆக்கத்தால் நம்முள் ஏற்பட்டுள்ள அழுத்தததிலிருந்தும் நமக்கு விடுதலை வேண்டும். அது தான் உண்மையான விடுதலை.**

**What we need is the freedom from the shackles of our sences. That alone is true Freedom.**

## வாரியார் விருந்து

# மறைய நின்றுளான்

### திருமுருக கிருபானந்தவாரியார் சுவமிகள்

கடவுள் கண்ணுக்குத் தெரியாமையால் இல்லை என்பர் சிலர், உண்டோ இல்லையோ என்று ஐயுறுவர் சிலர். இருந்தால் கட்புலனுக்குத் தோன்றவில்லையே என்று வினவுவோர் சிலர். இப்படியான வாதப்பிரதிவாதங்கள் இன்றல்ல, என்றும் உண்டு. ஒளி ஒன்றுண்டானால் இருளும் உண்டுதானே.

கல்வி கற்று M.A. , B.A. பட்டம்பெற வேண்டுமானால் பல ஆண்டுகள் முயலுகின்றான். ஒரு பனை பழுக்க வேண்டுமானால் பல ஆண்டுகள் காத்திருக்கின்றான். ஒரு டாக்டர் பட்டம் பெற வேண்டுமானால் பெருமுயற்சி செய்கின்றான். ஆனால் அகில லோக ஏகநாயகனாகிய எம்பெருமானைக் காண நாம் என்ன முயற்சி செய்து விட்டோம்? முயற்சி செய்து கண்டாரையாவது அணுகினோமா? அடுத்து அவர்கள் சொன்னபடி நடந்தோமா? சும்மா ஆரவாரம் புரிவதில் என்ன பயன்? நன்கு சிந்தியுங்கள்.



அமெரிக்காவுக்கு ஒருவன் போய்வந்து 'அமெரிக்கா என்று ஒரு தேசம் உண்டு' என்றான். 'எங்கே என்றும் எப்படியுள்ளது' என்றும்?, வினவிய ஒருவனுக்கு ஒரு காகிதத்தில் சில கோடுகள் இட்டு இது தான் அமெரிக்கா என்று படம் வரைந்து காட்டினான். நல்லது என்று ஒப்பக் கொள்கிறவன் தானே அறிவாளி. "இந்தக் கோடு அமெரிக்காவா? இது சுத்தப்பொய், 'அமெரிக்காவே கிடையாது' என்றால் அது அறிவுடமையாகுமா? உள்ள அமெரிக்காவை இல்லை என்றால் அமெரிக்காவுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. அங்கு போய் வந்து உண்டு என்கின்றானே அவனுக்கும் நஷ்டமில்லை. இல்லை என்பவனுக்குத்தான் நஷ்டம். அதைப்பற்றிச் சிந்திக்கவோ, அதைப்பற்றி அறிந்து கொள்ளவோ அங்குள்ளவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடவோ முடியாமல் போய்விடுகின்றது. போய் வந்த ஒருவர் போகாத ஒருவனுக்குக் காகிதத்தில் கோடுபோட்டு அமெரிக்காவைக் காட்டியது போல், பல பிறப்புக்களிலே அரிய பெரிய தவஞ்செய்து, அதன்விளைவாக வந்த இப்பிறப்பிலே யோக நெறி நின்று, அதன் முதிர்ச்சியிலே ஞானக்கண் கொண்டு அவனருளே கண்ணாகக் கொண்டு-இறைவனைக் கண்ட ஆன்றோர்கள், காணமாட்டா மற்றவர்கட்கு 'இறைவன் சொரூபம் இது' என்று அமைத்த அமைப்புக்களே திருக்கோயில்களில் விளங்குந் திருவுருவங்கள் எனவுணர்கள்.

"குறிகளும் அடையளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்ற தோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாதே"

என்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

"இந்தக் காகிதம் அமெரிக்காவா? இந்தக் கோடு அமெரிக்காவா?" என்று கேட்பது போல் "இந்தக் கற்சிலையா கடவுள்? இந்தச் செப்புச்சிலையா கடவுள்?" என்று கூறுகின்றார் பலர். அவர்கள் அறியாமையைக் கண்டு இரங்குவதையன்றி பச்சாதபப்படு வதையன்றி -வேறு என்ன செய்வது? அமெரிக்காவை இப் படஞ் சுட்டிக்காட்டி அறிவிப்பது போல் சச்சிதானந்தப் பரம்பொருளை இந்தக் கல்-செப்புச்சிலைகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கப்படத்தை கண்ட ஒருவன், அதற்கு அப்பால் உள்ள அமெரிக்காவைப் பற்றி அறிந்து அறிவைப்பெறுவது போல் திருவுருவங்களைக் கண்டதும் அதன் நுட்பங்களையும்,

திட்பங்களையும் கண்டு அப்பொருளை உணர்வு வழியால் காணமுயல்வது அறிவுடமையாகும்.

அடியில் வரும் தித்திக்கும் தேன் போன்ற செந்தமிழ் வசனங்களை ஊன்றிப்படிக்க.

**"உருவெனவும் அருவெனவும் உளதெனவும் இலதெனவும்**
**உழலுவன பரசமய கலை யாரவாரமற**
**உரையவிழ உணர்வவிழ உளமகிழ உயிரவிழ**
**உளபடியை உணருமவர் அநுபூதி யானதுவும்**
**உடலுமுடல் உயிரும்நிலை பெறுதல் பொருளென உலகம்**
**ஒருவிவரும் அநுபவன சிவயோக சாதனையில்**
**ஒழுகுமவர் பிறிதுபர வசமழிய விழிசெருகி**
**உணர்வுவிழி கொடுநியதி தமதூடு நாடுவதும்"**

உணர்வு விழி கொண்டு தனக்குள் மறைந்திருக்கின்ற அப்பரம்பொருளைக் காண்பதுவே மதியுடைமை.

1. விறகைப் பார்க்கின்றான் ஒருவன். அதில் மறைந்திருக்கின்ற கனல் கண்ணுக்குத் தெரிய வில்லை. கண்ணுக்குத் தெரியாதமையால் கட்டைக்குள் கனல் இல்லையென்று சொல்லலாமா? கட்டையை நன்கு கடைந்தால் கனல் வெளிப்படுகின்றது.

2. பாலைப் பார்க்கின்றோம். பாலில் மறைந்துள்ள நெய் கண்ணுக்குத் தெரியவில்லை. நெய் தெரியாமையால் பாலில் நெய் இல்லையென்றால், நம்மைப் பார்த்து உலகம் சிரிக்காதா? பாலைக் காய்ச்சி இளஞ் சூட்டில் பிரை விட்டு, அசையாமல் உறியில் வைத்து, விடியற்காலையில் மத்தும் கயிறும் கொண்டு கடைந்தால் பாலில் மறைந்திருந்த நெய் வெளிப்பட்டுத் தோன்றுகின்றது.

3. ஒரு வைரக் கூழாங்கல். அதில் ஒளி உள்ளே மறைந்திருக்கின்றது. சற்றுக் கடைந்தால் மறைந்திருந்த ஒளி பளீரென்று வெளிப்படுகின்றது.

எனவே கட்டையில் கனல், பாலிலே நெய், மணியிலே ஒளி அது போல் உள்ளத்திலே இறைவன்மறைய நின்றுள்ளான்.

இந்த மூன்று தன்மைகளையும் சிந்தியுங்கள். ஆன்மாக்களிலேயும் மூன்று பிரிவுகள் உண்டு. மும்மலமுடைய ஆன்மாக்கள் சகலர். இரு மலமுடைய ஆன்மாக்கள் பிரளயாகலர், ஒரு மலமுடைய ஆன்மாக்கள் விஞ்ஞானகலர்.

மும்மலமுடைய (சகலர்) ஆம்மாக்களுள்ளே இறைவன் விறகில் உள்ள தீயைப்போல மிக மிக மறைந்திருக்கின்றான்

விறகையும் மிகவும் முயன்று கடைந்து தீயை வெளிப்படுத்துவது போல் முறுக வாங்கிக் கடைய முன்னிற்பன். **முறுக வாங்கிக் கடைய** என்ற மூன்று சொற்கள் அமைந்திருப்பமை உய்த்துணர்க. மூன்று மலமுடையார் முயன்று முயன்று கடைந்து, மறைய நின்ற பெருமானை அறியவேண்டும்.

இனி இரு மலமுடைய (பிரளயாகலர்) ஆன்மாக்களுக்குள்ளே பாலில் நெய்போல் மறைய நின்றுள்ளான்.

"வாங்கிக் கடைய முன்னிற்குமே" இனி ஒரு மலமுடைய (விஞ்ஞானகலர்) ஆன்மாக்க ளுக்குள்ளே மணியில் ஒளிபோல சற்று லேசாக மறைந்துள்ளான். சிறிது கடைந்த மாத்திரத்தில் மணியில் ஒளி தோன்றுவது போல் சற்று தியானம் புரிந்தவுடன் பேரொளிப் பிழம்பாகிய பெருமான் தோன்றி அருளுவான். கடைந்தால் முன்நிற்பன்.

எனவே பக்தியென்ற மத்தைக்கொண்டு ஞானமாகிய கயிற்றுடன் இணைத்துக் கடைந்தால் மறைந்து நின்ற நிறைந்த ஜோதிப்பொருள் தோன்றும். முயன்றவர்க்குப் பயன் உண்டு. அயரா அன்புடன் முயன்ற சிவஞானிகள் உள்ளத்தில் அரன் காட்சி தோன்றும். "அயரா அன்பின் அரன்கழல் செலுமே"
என்பது மெய்கண்ட சூத்திரம்.

இவற்றை எல்லாம் எமக்குத் தெள்ளத்தெளிவாக உபதேசிக்கின்றார் அப்பர் சுவாமிகள்.

"விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே."



# தெய்வநம்பிக்கை மூடநம்பிக்கை

-கண்ணதாசன்-

ஆண்டவன் மீதும் சாஸ்திரங்கள் மீதும் நாம் வைக்கும் நம்பிக்கையே 'மூடநம்பிக்கை' என்று சொல்லும் பகுத்தறிவாளர்கள் உண்டு.

அவர்களுடைய நம்பிக்கைகள் எல்லாம் 'கெட்டிக்காரத்தனம்' என்றும் நம்முடைய நம்பிக்கைகள் மட்டும் 'மூடத்தனம்' என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

நான் சொல்கிறேன், நம்பிக்கையில் மூட நம்பிக்கை, குருட்டு நம்பிக்கை, கெட்டிக்கார நம்பிக்கை எதுவும் கிடையாது.

சொல்லப்போனால் நம்பிக்கை என்பதே ஒரு மூடத்தனம். அதிலே தனியாக ஒரு மூடநம்பிக்கை ஏது? நாட்டு மக்கள் எல்லாரையுமே நாத்திகர்களாக ஆக்கிவிட முடியும் என்று நம்பித்தான் பெரியார் பிரசாரம் செய்தார் அந்த நம்பிக்கை எப்படி முடிந்தது? திராவிட நாடு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் அந்தக் காலத்தில் பலர் தி.மு.க வில் சேர்ந்தனர். அதன் கதி என்ன? தனுஷ்கோடி எக்ஸ்பிரஸில் போனவர்கள், ஊர் போய்ச் சேரலாம் என்ற நம்பிக்கையில் தான் போனார்கள்.அந்த நம்பிக்கை மூடத்தனம் என்பதை அரியலூர் நிரூபித்தது.

நம்பிக்கை என்பது, இப்படி நடக்கும் என்று ஆசைப்படுவது. அப்படி நடக்காமலும் போய்விடலாம். அப்போது அது மூடத்தனமாகிவிடுகிறது.

மகன் கல்லூரிக்குக் கட்டப்போகிறான் என்று நம்பித்தான் தகப்பன் பணம் அனுப்புகின்றான். அவன் அதை எப்படியும் செலவழிக்கலாம்.

அழகான ஹோட்டல், அருமையான சாப்பாடு ஆரோக்கியமான முறையில் சமைக்கப் பட்டிருக்கும் என்று நம்பித்தான் சாப்பிடுகிறோம். சமையற் கட்டில் என்ன என்ன நடந்திருக்குமோ யார் கண்டது?

'இவர் நமது ஒழுங்கான பிரதிநிதியாக இருப்பார்' என்று நம்பித்தான் மக்கள் ஒருவருக்கு வாக்களிக்கின்றார்கள். அவர் எப்படியெப்படியோ மாறிவிடுகிறார்!

நம்பிக்கை வெற்றி பெறும்போது மட்டுமே கெட்டிக்காரத்தனம் போல் காட்சி அளிக்கிறது. மற்ற நேரங்கள் அனைத்திலும் அது மூடத்தனம்தான்!

ஆண்டவனை நம்புவதிலும் அதே நிலைதான். அது தோல்வியுற்றால் மூடத்தனம், வெற்றி பெற்றால் கெட்டிக்காரத்தனம்.

ஆகவே நம்பிக்கை என்ற மூடத்தனம் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு. அதில் ஆஸ்திகன் மட்டுமென்ன தனி ஜாதி!
இது வரை எந்த நம்பிக்கை எல்லா நேரங்களிலும் பலித்திருக்கின்றது?
ஆனால் நம்பிக்கை என்ற மூடத்தனத்தை ஏன்



எல்லாருமே மேற்கொள்கிறார்கள்?
அதிலே மனதுக்கு ஒரு சாந்தி. தெய்வ நம்பிக்கை, நிம்மதிக்கும் மகிழ்ச்சிக்கு மாகவே ஏற்பட்டது. விஞ்ஞான நம்பிக்கையைப் போல் ஒரு காலகட்டத்தில் தோல்வியுற்றாலும், மறு கட்டத்தில் வெற்றி பெறுவது தான் தெய்வநம்பிக்கை.

'ஒரு சூத்திரதாரியின் கைப் பொம்மைகள் நாம்' என்பதை மறக்க முடியாது மரணம் என்ற ஒன்று, அதைத் தினசரி வலியுறுத்துகிறது. இவ்வளவிற்குப் பிறகும், தெய்வ நம்பிக்கையைச் சிலர் மூட நம்பிக்கை என்று சொல்வர்களானால், 'நான் ஒரு மூடன்' என்று சொல்லிக்கொள்வதிலே பெருமைப்படுகிறேன். முட்டாள்தனத்தில்

இருக்கிற நிம்மதி, கெட்டிக்காரத்தனத்தில் இல்லை.

உடம்பிலோ எல்லா நோயும் இருந்தும், 'ஒன்றுமே இல்லை' என்று நம்புகிற முட்டாள் ஆரோக்கியமாகவே இருக்கின்றான். ஒரு நோயும் இல்லாமலேயே ஒவ்வொரு மயிர்க்காலையும் பார்த்து 'இது அதுவாக இருக்குமோ?' என்று ஆராய்ச்சி செய்கிற அறிவாளி, நித்திய நோயாளியாகச் சாகிறான். 'சுடு' என்று சொன்னவுடனேயே யாரைச்சுடுகிறோம் என்று பார்க்காமலே சுடுகின்ற படைகள் தாம் நாட்டுக்கு வெற்றி தேடித் தந்திருக்கின்றன. அந்த நேரத்தில் படைகள் பகுத்தறிவை உபயோகிக்கத் தொடங்கினால், பகுத்தறிவு மிஞ்சும், நாடு மிஞ்சாது.!

'போரில் தயக்கம் காட்டிய அர்ஜுனனைப் பார்த்து கண்ணன் அதைத்தான் சொன்னான். 'போர் என்று வந்தபின் உறவினர்கள் என்ற ஆராய்ச்சி வெற்றிக்கு உதவாது' என்றான். கடைசியில் கண்ணன் மீது மூடநம்பிக்கை வைத்து அர்ஜுனன் காண்டீபத்தைத் தூக்கினான். முடிவு வெற்றியாகக் கனிந்தது. கீதையில் கர்மயோகம் மானிடக் கடமைகளை வலியுறுத்துகிறது.

பக்தி யோகம், தியானத்தை வலியுறுத்துகிறது. கடமையும் நம்பிக்கையுடன்தான் நடைபெறுகிறது. தியானமும், நம்பிக்கையுடன்தான் நடை பெறுகிறது.
'மனம் உண்டானால் வழி உண்டு' என்பது பெரியோர் வாக்கு. அது மானிட தர்மத்துக்கும் பொருந்தும், தியான தர்மத்துக்கும் பொருந்தும்.

ஆகவே, தெய்வ நம்பிக்கையை மூடநம்பிக்கை என்று சொல்வதைப் பற்றி நான் வருந்தவில்லை. இந்த மூடனும், அந்த அறிவாளியும் நம்மிடம் தான் வரப்போகிறார்கள் என்ற நம்பிக்கை தெய்வத்திற்கு இருக்கிறதே, யார் என்ன செய்ய முடியும்! ■

## எங்கும் எதிலும் இறைவனே! சால்வை எங்கே போனது?

முன்னொரு காலத்தில் தரிசிரபுரம் பகுதியை விஜயாங்க சொக்கலிங்க நாயக்கர் என்ற மன்னர் ஆண்டு வந்தார். ஒரு முறை இந்த அரசர், மகா யோகியான தாயுமானவருக்கு காஷ்மீர் சால்வை ஒன்றைப் பரிசளித்தார். அதைப் பெற்றுக்கொண்டு அரசனை ஆசீர்வதித்தார் தாயுமானவர்.

நாட்கள் கடந்தன. ஒரு நாள் தாயுமானவர் ஏழ்மையான முதியவள் ஒருத்தியைக் கண்டார். அவள் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தாள். உடனே அவர், அரசன் தனக்குப் பரிசளித்த சால்வையை அந்தப் பெண்ணிடம் கொடுத்தார். அவள் அதை வாங்கத் தயங்கினாள். தாயுமானவர் விடாமல் வற்புறுத்தவே சால்வையைப் பெற்றுக்கொண்டாள்.

இந்த விஷயத்தைப் பிறபாடு அறிய நேர்ந்த அரசர் கடுங்கோபம் கொண்டார். தான் பரியத்துடன் அளித்த, விலை மதிக்க முடியாத சால்வையை ஒரு முதியவளுக்கு கொடுத்ததன் மூலம் தாயுமானவர் தன்னை அவமதித்ததாகக் கருதினார் அரசர். எனவே தாயுமானவரை வரவழைத்து அவரிடம், 'நான் தங்களுக்குப் பரிசளித்த சால்வை எங்கே?' என்று கேட்டார். ஆனால் தாயுமானவர் பயப்படவில்லை. பதற்றப்படாமல் பேசினார்: "நான் அதை அகிலாண்டேஸ்வரிக்குக் கொடுத்தேன். அவள் உன்னை மிகவும் ஆசீர்வதித்தாள்!" தாயுமானவரின் இந்தப் பதிலைக் கேட்டதும் அரசர் மிகவும் வெட்கி அவரிம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். நிஜமான ஞானி ஒருவருக்கு தான் பார்ப்பது, கேட்பது, செய்வது எல்லாமும் ஈசுவர ஸ்வரூபமாகவே இருக்கும். அரசரின் கண்களுக்கு ஏழை முதியவளாகப் புலப்பட்டவள், தாயுமானவரின் கண்களுக்கு சாட்சாத் அகிலாண்டேஸ்வரியாகத் தெரிந்தாள்.

******

சிதம்பரத்தில் செங்கழுநீர் பிள்ளையார் சந்நிதி உள்ளது. திப்புசுல்தான் காலத்தில் முகம்மதியர்கள் இவரது கையை உடைத்து விட்டனர்.
பொது மக்கள் வேறு சிலை வைக்க முயன்றனர். அப்போது பிள்ளையார் அவர்களுள் ஒரவரது கனவில் தோன்றி "கையொடிந்த உன் மகனை விரட்டிவிடுவாயா?" என்று கேட்டார்.
மக்கள் இறைவனின் திருவுள்ளத்தை உணர்ந்து கை ஒடிந்த கணபதியாகவே இன்றும் வழிபடுகின்றனர்.

சிதம்பரத்தில் செங்கழுநீர் பிள்ளையார் சந்நிதி உள்ளது. திப்புசுல்தான் காலத்தில் முகம்மதியர்கள் இவரது கையை உடைத்து விட்டனர்.
பொது மக்கள் வேறு சிலை வைக்க முயன்றனர். அப்போது பிள்ளையார் அவர்களுள் ஒரவரது கனவில் தோன்றி "கையொடிந்த உன் மகனை விரட்டி விடுவாயா?" என்று கேட்டார்.
மக்கள் இறைவனின் திருவுள்ளத்தை உணர்ந்து கை உடைந்த கணபதியாகவே இன்றும் வழிபடுகின்றனர்.

# ஆலய வழிபாடு

## விக்கிரகங்கள் கல்லிலும் செம்பிலும் இருப்பது ஏன்?

ஏராளமான பொருட்செலவில் கட்டப்படும் கோயிலில் இறைவனை கல்லிலும், செம்பிலும் வடிப்பது ஏன்? விலை உயர்ந்த தங்கம், வெள்ளி போன்ற உலோகத்தினால் அமைக்கலாம் அல்லவா? என்ற கேள்வி எழுவது நியாயம்தான்.

மூலவிக்கிரகத்தை கல்லிலும், உற்சவ விக்கிரகங்களைச் செம்பு, ஐம்பொன்னாலும் செய்வது வழக்கம். மின்னாற்றல் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பாய்ச்ச செம்புக் கம்பிகளையே பயன்படுத்துகின்றோம். மூலஸ்தானத்தில் சேமிக்கப்பட்ட தெய்வ மின் ஆற்றலை ஆன்மாக்களின் உய்வு கருதி திருவீதிகளில் பாய்ச்சுகின்ற உற்சவமூர்த்தியை செம்பினால் அமைத்தனர் நம்முன்னோர்கள்.

விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்யுமுன் யந்திரத்தகடுகள், பொன், வெள்ளி, வைரம் முதலிய மதிப்புமிக்க பொருட்களைப் போட்டு மூடுவர். பின்னர் சிலையை வைத்து மூலிகை மருந்துகளால் கெட்டித்து வேத மந்திரம் முழங்க பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. உலோக சக்தி, மனோ சக்தி, மந்திர சக்தி, ஆன்ம சக்தி ஆகிய சக்திகளால் சிலையானது உரு ஏற்றப்பட்டுத் தெய்விகத்தன்மை பெற்று விடுகிறது. இதனால் ஈர்ப்பு சக்தியும் உயிர்ப்பு சக்தியும் பெற்று விடுகிறது.

இறைவனது சிலைக்கு'விக்ரகம்' என்று பெயர். 'விக்ரகம்' என்றால் இறைவன் விசேடமாக இருக்கும் இடம் என்று பொருள். இறைவனை மூலவராகக் கல்லில் செதுக்கி வைத்துள்ளார்கள். ஆனால் உற்சவர் செம்பினால் செய்யப்படுகிறது. செப்புக்கம்பிக-ளின் மூலம் மின்சாரம் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பாய்கிறது. இறைவனை ஆலயத்திற்குச் சென்று வழிபட முடியாதவர்களுக்கு ஏதுவாக உற்சவமூர்த்தி நகர்வலம் வருகிறார். மூலஸ்தானத்தில் இருக்கும் இறைசக்தி உற்சவ மூர்த்தி மூலமாக திருவீதி வந்து பக்தர்களுக்குக் கிடைக்கிறது.

சாதாரணமான மானிடராக இருக்கும் நம்மால் உருவ வழிபாட்டின் மூலமாகவே இறையருளைப் பெற முடியும்.

மூலஸ்தானத்திற்க மேலுள்ள விமானம் மனிதனுடைய பிரம்மரந்திரம் என்ற சகஸ்ராரச் சக்கரத்தை அறிகுறியாகக் காட்டுகிறது. அந்தச் சக்கரம் ஆயிரம் இதழ்களையுடைய இரண்டடுக்குத் தாமரை போன்றது. அவ்விதமே மூலஸ்தான விமானங்கள் அமைக்கப்படுகின்றன. அதிக உயரம் இல்லாமலும், உருவத்தில் தாமரை மொக்கு போலவும், பெரிய ஆலயங்களில் பொன் வேயப்பட்டுச் சூரியப் பிரகாசமாகவும் சீவன் முத்தனுடைய சகஸ்ராரம் போலவே அழகாக ஒளிவீசித்திகழும்.

## பூஜைக்குத் திரை அவசியம்

பூஜா காலேது தேவானாம் புஷ்பா லங்காரணே ததா!
முத்ராப்ரதர்சன காலேச ஹேம ரத்ன ஸமர்ப்பணே!
ஏவமேதேஷு காலேஷு படிமாச் சத்ய வாஸனா
நிர்மால் யோத் வாஸனே காலேஸ்நா நாலங்கரணாநதரே!!
போஜ்யா ஸனாந்தே தேவஸ்ய அபனீய படம் ததா:
ஸப்னே தீப காலேச ஹவிரந்தே ததைவச
ஸ்நபனே தீபகாலேச ஹவிரந்தி தத்யேவ!
நித்யோத்ஸவாதி காலேஷு ப்ரச் சாதன படம் த்யஜேத்!!

பரமேசுவர ஸம்ஹிதையின் இந்தச் செய்தி பஹுதேக பாத்ம ஸம்ஹிதையின் வார்த்தைகளுக்கு ஒப்பவே உள்ளன. மணியைப் போன்றே திரையின் தவிர்க்க முடியாத தேவையையும் சாத்திரம் சாற்றுகின்றது. எதற்காகத் திரைபோட வேண்டும்! ஞானம், மற்றும் அக்ஞானம் என்னும் இரண்டும் உரிச்சொற்கள். இவ்விரண்டின் நடுவே உள்ளதே திரை. அக்ஞானம் என்னும் திரை விலகினால், ஞானக்காட்சி கிட்டுகிறது.

இத்திரையை விலக்குபவர் யார்? அவர்தான் குரு. அது போலவே தேவர்களுக்கும், பக்தர்களுக்கும் நடுவே திரை தொங்கவிடப்பட்டிருக்கும். இறைவனின் தரிசனத்திற்கு இந்தத் திரை தடையாக இருக்கிறது. இதனை விலக்குபவரே அர்ச்சகர். திரையை விலக்கி இறைக்காட்சி பெறச் செய்கின்றவர் அர்ச்சகர். இதைப்பேலவே சில சயமங்களில் திரையைப்போட்டுவிடுவதும் உண்டு. அது எப்போது என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

புஷ்பத்தால் அலங்கரிக்கும் போது, முத்திரைக-ளைக் காட்டும் போது, நகைகள் அணிவிக்கும் போது, நிர்மால்யத்தை விலக்கும் போது, ஸ்நாநம் (மனக்களத்தைச் சுத்தமாக்கும் உட்குளியல்) மற்றும் அலங்காரம் செய்தல்,

நிவேதனம் படைத்தல், இந்தக் காலங்களில் திரை போடப்பட வேண்டும்.

ஸ்நபனே தீபகாலேச ஹவிரந்தி தத்யேவ!
நித்யோத்ஸவாதி காலேஷு ப்ரச் சாதன படம் த்யஜேத்!!
ஸ்னபனம் -என்றால் பஞ்சசாம்ருதத்தால் அபிஷேகம். ஆரத்தி, நிவேதனம் இவற்றிற்குப் பின்னர்(உபசார சேவைகளில்) நித்யோத்ஸவ சமயத்தில் திரையை விலக்குதல் வேண்டும் இவ்வாறு ஸம்ஹிதை சொல்கிறது.

திரை போடுதல் தவிர்க்க முடியாத சமயங்களில் அதாவது அந்தரங்க அபிஷேகம் அலங்காரம் முதலிய சேவை மற்றும் நிவேதனம் படைத்தல் இந்தச் சமயங்களில் மட்டும் திரை போடப்பட்டால் போதும்.

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

# மனிதவாழ்வில்ஜேதிடம் மாபெரும் பொக்கிஷம்

ஜேதிடபூஷணம் துன்னையூர்
சிவஸ்ரீ ராம். தேவலேகேஸ்வரக்குருக்கள்

சென்ற இதழ்த் தொடர்ச்சி

## திருவோண நட்சத்திரம்:

இந்த நட்சத்திரத்தின் அதிபதிக் கிரஹம் சந்திரபகவான். இந்த நட்சத்திர நான்கு பாதங்களும் மகரராசியிலே அடங்கும். பொதுவாகவே நல்ல சிறப்பான உயர்வான வாழ்வியலை இந்த நட்சத்திரத்திலே பிறந்த இருபாலரும் அடைவார்கள். ஆண்களைப் பொறுத்த வரையில் ஆளுமைத்திறன் மிகவும் அதிகமாக இருக்கின்ற தன்மை உண்டு. இடம், பொருள், ஏவல் எனப்படுகின்ற மூன்று நிலை தன்மைகளுக்கும் ஏற்ப தம்மை தயார் படுத்தி விடும் திறமை உடையவர்கள். முற்பகுதி வாழ்வில் சில சிரமங்கள் கஷ்டங்கள் இருப்பினும் பிற்பகுதியிலே எல்லா விதமான பூரணம் பெறுகின்ற நிலை இவர்களுக்கு அமையும். தாம் நினைக்கின்ற விடயத்தைச் சாதிக்கின்ற ஆற்றல் சற்று அதிகமாகவே இருக்கும். சமூகத்தில் நல்ல உயர்வும், பிரபல்யமும், மிகவும் சிறப்பாக பெற்றுவிடுகின்ற தன்மைகள் இவர்களிடம் உண்டு. மற்றும் இந்த நட்சத்திரத்திலே பிறந்த பெண்கள் நல்ல வசீகரமும், கவர்ச்சியு முடையவர்களாக இருப்பார்கள். இவர்களின் புகுந்த வீட்டிலே இவர்களின் ஆளுமைதான் சற்று மேலோங்கி இருக்கும். எதிர்பாரத வகையில் வாழ்வில் உயர்வுகளைப் பெறும் நிலை இந்த நட்சத்திர அன்பர்களுக்கு உண்டு. அவர்களின் வாழ்வியல் எங்கு அமைந்தாலும் அந்த இடத்தில் இவர்களைப் பற்றிய ஒரு பரிச்சியம் இருக்கும் "திருவோணம் ஒரு கோணம் ஆளும்" என்கின்ற ஜோதிட மொழியும் உண்டு. இந்த நட்சத்திரத்தின் அதிபதித் தெய்வம் விஷ்ணு பகவான். இவர்களுக்கு உரிய அதிஷ்ட இரத்தினம் முத்து. அதிஷ்ட நிறம் வெள்ளை, நீலம். கபடமில்லாத குண இயல்புடன் காரியங்களை நகர்த்தினால் உயர்வான உத்தமமான சிறப்புடைய வாழ்வுதனை பெற்று பூரணத்துவம் உடையவர்களாக மிளிர்வார்கள்.

## அவிட்டம் நட்சத்திரம்:

இந்த நட்சத்திரத்தின் அதிபதிக்கிரஹம் செவ்வாய் பகவான். இந்த நட்சத்திரத்தின் முதலாம் இரண்டாம் பாதங்கள் மகரராசியிலும் மூன்றாம், நான்காம் பாதங்கள் கும்பராசியிலும் அமைகின்றன. பொதுவாக எல்லா விதத்திலும் நன்மைகளும், சுகங்களும் அனுபவிக்கக் கூடிய கொடுப்பனவு உடையவர்கள். இந்த அவிட்ட நட்சத்திர அன்பர்கள். இவர்கள் எந்நிலையில் இருந்தாலும் கௌரவம், புகழ், தேவையான விடயங்கள் தகுந்த நேரத்திலே அமையும்."அவிட்டத்தில் பிறந்தோர் தவிட்டுப் பானையைத் தொட்டாலும் தங்கமாகும்" எனும் ஜோதிட மொழியும் உண்டு. மற்றவர்களைத் தம் வசமாக்கும் வல்லமை இவர்களிடம் உண்டு. செய்யும் தொழிலில் இவர்களுக்கு அதிகமான ஆளுமை அமையும். தொழிலுக்கு உரிய கல்வியோ, தகுதியோ இல்லாத நிலை இருப்பினும் ஏதோ ஒரு வகையில் இவர்களுக்கு சிறப்பான கௌரவமும், பணவரவும், சமூக அந்தஸ்தும் அமைந்து விடுகின்ற நிலை உண்டு. இருப்பினும் பிரத்தியோகமாக பணம் சம்பாதிக்க வேண்டும் என்கின்ற ஆர்வம் மிக அதிகமாக

இருக்கும். இந்த நட்சத்திரத்திலே பிறந்த பெண்கள் தான தர்மம் செய்கின்ற தயாள குணமும், ஆடை, ஆபரணம், செல்வம் என்பன மிகுதியாய் அமைந்தவளாகவும், நல்ல குடும்பம் அமையக்கூடியவளாகவும், எந்த நிலையிலும் "பெண்மை"எனும் பெருமிதத்தை காக்கின்ற குண முடையவளாகவும் இருப்பார்கள். இந்த நட்சத்திரத்தின் அதிபதித் தெய்வம் முருகன். இவர்களுக்கு உரிய அதிஷ்ட இரத்தினக்கல் 'பவளம்' அதிஷ்டம் தரக்கூடிய நிறம் சிகப்பு, நீலம் பொதுவாகவே எல்லா சுகபோகமும் இயற்கையாக ஏதோ ஒரு வகையில் அமைந்து விடுவதால் இந்த நட்சத்திரமுடையவர்களுக்க சிறிய ஆணவம் தலை காட்டுவது உண்டு. அதைத் தவிர்த்து தன்னடக்கத்தோடு நடந்தால் எல்லா விதமான சிறப்புக்களையும் பெறக்கூடிய நிலைகள் நீடிக்கும்.

## சதய நட்சத்திரம்:

இந்த நட்சத்திரத்தின் அதிபதிக் கிரஹம் ராகு பகவான். இந்த நட்சத்திரத்தின் நான்கு பாதங்களும் கும்பராசியிலே அடங்கும். பொதுவாகவே இந்த நட்சத்திர அன்பர்கள் பொறுமையின் சின்னமாக இருப்பார்கள். எந்த விடயமாக இருப்பினும் அலசி ஆராய்ந்து செயற்படுத்துகின்ற நிலை இருக்கும். மற்றவர்களின் மனம் நோகாத வண்ணம் செயற்பாடுகளை நகர்த்துவதில் சாதுர்யம் பெற்றவர்கள். தன்னுடைய குடும்பம், தன் உறவுகளுக்காக மிகவும் கடுமையாக உழைக்கின்ற இயல்பைக் கொண்டவர்கள். செய்நன்றி மறவாத குண இயல்பை சிறப்பாகக் கொண்டவர்கள். நல்ல அறிவும் செயல்திறனும் நேர்த்தியாக இருக்கும். செய்கின்ற தொழிலில் தன்னுடைய பணியை மிகவும் சிறப்பாக செய்யக்கூடிய ஆளுமையும், நேர்மையும் கொண்டவர்கள். இவர்களின் உள்மனதிலே இருக்கின்ற விடயங்களை எளிதிலே அறிந்துவிட முடியாது. ஏதாவது யோசனையை அல்லது சோகத்தை மனதிலே கொண்டு வாழ்வார்கள். எப்பொழுதும் அதிகம் பேசமாட்டார்கள். மௌன-னமாக இருந்தே மனதிலே புதிய புதிய திட்டங்கள் தீட்டி செயல்படுத்துவார்கள். இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண்கள் தர்மசிந்தனையுடையவர்களாகவும், பெரியோரைக் கனம் பண்ணுகின்ற பண்படையவர்களாகவும், தனது பிறந்த வீட்டைப்போலவே புகுந்த வீட்டையும் நேசிக்கின்ற நேர்மை கொண்டவராகவும், கணவனை மிகவும் நேசித்து செயல்படும் இயல்பு கொண்டவராகவும் இருப்பார்கள். நட்சத்திர அதிபதி ராகு பகவான். எனவே எல்லா வகை சிறப்புக்கள் வாழ்விலே இருந்தாலும், ஏதோ ஒரு வகையில் மனச்சஞ்சலம், சோகம், ஒட்டிக்கொண்டே இருக்கின்ற நிலை உண்டு. இந்த நட்சத்திர அதிபதித் தெய்வம் விநாயகர். அதிஷ்ட இரத்தினக்கல் 'கோமேதகம்'. அதிஷ்ட நிறம் நீலம். நல்ல பிரார்த்தனையும், தான, தர்மங்களும் இந்த நட்சத்திர அன்பர்களுக்கு வாழ்வில் எல்லா நலன்களையும் கொடுக்க ஏதுவாக அமையும்.

## எனக்கொரு கடவுள் வேண்டும்!!

அப்பா கடவுள் இருக்கிறாரா? இல்லையா? சைக்கிள் பழகிக்கொண்டு இருந்த என் பத்து வயதுப் பையன் சட்டென்று தரையில் காலூன்றி நின்று கேட்டான். என்னடா திடீரென கேட்கின்றாய் என்றேன்?

இல்லையப்பா கடவுள் என்று ஒருவர் இல்லவே இல்லை. எல்லாம் பொய் என்று என்னுடைய தமிழ் ஆசிரியர் சொன்னார். கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்பது முக்கியம் இல்லை அப்படி வேண்டுமா என்பது தான் முக்கியம், என்றேன் நான்.

எமக்கு எதுக்கு கடவுள்? சரி அதை நான் பின்பு சொல்கின்றேன் நீ சைக்கிளை ஓட்டு. இரண்டு நாட்களாக மும்முரமாக சைக்கிள் பழுகுகிறான். பின்னே பிடித்துக்கொண்டு நான் கூடவே ஓடவேண்டும். இன்று ஓரளவு தானகவே ஓடப்பழகிவிட்டான் என்று தெரிந்ததும் நான் அவனது பின்னால் ஓடுவதை நிறுத்திவிட்டேன். அவன் நன்றாகவே ஓட்டிச் சென்ற பின் சபாஷ் என்று கைதட்டினேன்.

அடுத்த கணம் சைக்கிளைப் போட்டுக்கொண்டு தாடலென கீழே விழுந்தான். ஓடிப்போய் தூக்கியபடி நான் பிடித்திருக்கின்றேன் என்ற நம்பிக்கையால் உன்னால் இவ்வளவு தூரம் தனியாகவே ஓடிக்கொண்டு வரமுடிந்தது. ஆனா நான் கைவிட்டு விட்டேன் என்று தெரிஞ்ச அடுத்த விநாடி விழுந்து விட்டாய். கடவுள் நம்பிக்கை என்பது அப்படித்தான். நல்லா சைக்கிள் ஓட்ட கற்றபின் நீங்க பிடித்துக்கொள்ள வில்லை என்று தெரிந்தாலும் கூட நான் விழாமல் சைக்கிள் ஓட்டுவேன் என்றான்.

-ர.ரஜனீஸ்-

# திருவிளையாடற் புராணத் தமிழின்பம்......
# மதுரை வீதியில் விறகு விற்ற சொக்கநாதர்!

பேராசிரியர் கோ. வே பெருமாள்

தென் தமிழ்ப் பாண்டி நாட்டை 'வரகுணன்' ஆட்சி புரிந்து வந்தான். அவன் பேரவைக்கு வடநாட்டு யாழ்ப்பாணர் ஒருவர் வந்தார். அவர் பெயர் 'ஏமநாதன்' அவர் யாழிசைத் தேன் பொழிந்தார். பாண்டியன் வியந்தான். பல்வகை வரிசைகள், பரிசுகள் கொடுத்துச் சிறப்பித்தான். ஒரு மனையிலே இருக்க வகை செய்தான். சிறப்புக்கள் பெற்ற 'ஏமநாதன்' செருக்குமிக்குற்றார்.! எனவே அரசன் இசைப்புலவர் 'பாணபத்திரன்' வரப்பணித்தார். அத் தமிழிசைப் பாணனை, மன்னவன் வடபுல யாழ்ப்பாணன் ஏமநாதனோடு உன்னால் இசைப்போட்டியில் பாட இயலுமா? என்றான். அதற்கு இத் தமிழ்ப்பாணன்

"தென்னவர் பெரும! யான்உன் திருஉள வலனும் கூடல்
முன்னவன் அருளும் கூட்டும் முயற்சியால் முயன்று பாடி
அன்னவன் விருது வாங்கி, அவனைவீ(று)அழிப்பன்"

என்றார். அதற்கு அரசன் 'நன்று நாளையே பாடுக' என்று விரைந்து சொன்னான்! பாணன் வரும் வழிகளில், ஏமநாதனின் மாணவர்கள் இசை முழக்கம் கேட்கும் வாய்ப்புப் பெற்றான். கவலை மிகவும் கொண்டான். ஆயினும் கூடல் இறைவர் திருக்கோயில் சென்று வழிபட்டான். ஐயனே! அடியேனுக்கு நீங்களே அருள்துணை செய்ய வேண்டும், மெய்யனே!! என்று தொழுது வேண்டி வீடு சென்றான்.

தமிழிசை விழையும் இறைவர் பாணபத்திரன் கவலைபோக்கத் திருவுளம் கொண்டார்! ஒரு முதிய விறகு ஆளாய் தெருவிலே விறகு விற்க அடாத விலை சொல்லி வந்தார். சுமந்து வந்த விறகுக் கட்டினை ஒரு புறம் இறக்கி வைத்து, ஏமநாதன் வீட்டு வெளித்திண்ணையில் இருந்து இளைப்பாறினார்! மெதுவாக, இனிய இசையை எடுத்துச் சிறிது தொடுத்துப் பாடினார். அந்த இன்னிசை கேட்ட அளவிலே ஏமநாதன் வீட்டைவிட்டு வெளியே வந்தான்! 'பாடும் நீ யார்?' என்றான்! பண் அமைந்த யாழ்வல்லோன்-பாணபத்திரன் அடிமை என்றார் இறைவர். மேலும்

"கனிஇசைக் கிழவன் தன்கீழ்க் கற்பவர் அநேகர் தம்முள்
நனிஇசைக் கிழமை வேட்டு, நானுமவ் வினைஞன் ஆனேன்
தனிஇசைக் கிழவன் நோக்கித், 'தசைஎலாம் ஒடுங்க
- மூத்தாய்!
இனி, இசைக்கிழமைக்(கு) ஆகாய் என்று எனைத்
-தள்ளி விட்டான்!"

ஆதலின், "விறகு வெட்டி விற்று வயிறு வளர்த்து வருகின்றேன்." என்றார். இறைவர் பாடிய "நைவளம்" என்னும் பண்ணை ஏமநாதன் முன்னரே நன்கு அறிந்திருந்தான். ஆதலின் வியந்து "விறகுமள்ளா! அந்த இசையை இன்னும் ஒருமுறை பாடு" என்றான். இசைத்தமிழின் மீது இனிய ஆர்வம் மிகுந்த இறைவர், யாழிசைத்துப் பாடினார். கூட்டிலிருந்து தேன் ஒழுகுவது போல இருந்தது! கேட்டு எல்லா உயிர்களும் இன்புற்றன.

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசைச் சுரங்களின் வழியே 'சாதாரி'பண்ணும், வண்ணமும் திறமும் விளங்க, நரம்பு ஓசையும் குரல் ஓசையும் வேறுபாடு இன்றி இசைத்தார். அப்பொழுது அவர் உடலிலோ குரலிலோ தொழில் திறத்திலோ எவ்வகைக் குற்றமும் எழவில்லை. எழுதிய ஓவியம் போன்று இருந்து இசைத்தார். அமுதம் போன்ற அவ்விசை, எல்லா உயிர்களுக்கும் விருந்து ஆயது.

கண்ணிறை நுதலோன் சாம கண்டத்தின் எழுந்த
-முல்லைப்
பண்ணிறை தேவ கீதம் சராசர உயிரும் பாரும்
"விண்ணிறை திசைகள் எட்டும் விழுங்கித்தன் மயமே
-ஆக்கி
உண்ணிறை உயிரும் மெய்யும் உருக்கிய(து)
-இசைவல்லானை!"

'ஏமநாதன்' விடிவதற்கு முன்னரே யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் தன் குழுக்கள் குலைகுலைந்திட, இருள்வழியே வடக்கு நோக்கி நடந்தான். இதனைப் பாணபத்திரர் கனவிலே கண்டார். பாண்டியன் நனவிலே பாரத்தான்! இறைவர் திருவிளையால் தான் என்னே!

******



# உயர்வாசற்குன்று முருகன் ஆலயம்
## HIGH GATE MURUGAN TEMPLE

200A Archway Road London N6 5BA
Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508
**Email:admin@highgatehillmurugan.org**
**www:highgatehillmurugan.org**

# வருடாந்த மகோற்சவம்
## ANNUAL MAHOSTSAVA FESTIVAL

The Annual Mahotsava Festival of the above Temple will commence on Monday the 11th June 2007 with the flag hoisting ceremonies and conclude on Monday 25th June 2007, the Thirukalyana Utsavam being on Tuesday the 26th June 2006 and Vairavar Madai being on Wednesday the 27th June 2007.

| | |
|---|---|
| **10.06.07 – 9.00 am** | **Ganapathy Homam followed in the evening by formal Rituals with procession of Sri Vinayagar** |
| **11.06.07 – 11.30 am** | **Flag hoisting followed by Day Festival** |
| **6.00 p.m.** | **Evening Festival** |
| **24.06.07 11.30am** | **Chariot Festival, outside Chariot procession commences** |
| **25.06.07 1100 a.m** | **Water Cutting Ceremony "Theertham"** |
| **26.06.07 7.00 p.m** | **Thirukalyana Utsavam (Public Ubayam)** |
| **27.06.07 7.00 p.m** | **Vairavar Madai** |

**DAILY TIMING FROM 11.06.07 TILL 23.06.07**

**MORNING**

**08.30 Abisheham Commences**
**10.00 Pooja**
**10.45 Kodikamba Pooja**
**11.30 Vasantha Mandapa Pooja followed by Veethi Ula**
**12.45 Day Festival Concludes**

**EVENING**

**6.00 Evening pooja**
**7.00 Kodikamba pooja**
**7.45 Cultural Programme**
**8.15 Vasantha Mandapa Pooja followed by Veethi Ula starts**
**10.00 Evening Festival Concludes**

**ALL ARE CORDIALLY INVITED**

**Devotees are expected to strictly adhere to Saiva principles during the Festival season.**
**The timing shown above may slightly deviate in special circumstance.**

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சிந்தனைத் திறன்

சிவத்தமிழச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி



**"நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்**
**சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே-எல்லவரும்**
**ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே**
**ஆத்தனறி வெங்கே யறை".**

அறிஞர்களால் தான் ஒரு நாடு பெருமை அடைகிறது. நாவலர் பெருமானால் யாழ்ப்பாணம் பெருமை அடைகிறது. அவர் அவதரித்த காலம் யாழ்ப்பாண மக்கள் உண்மை அறிவிழந்து போலியில் மயங்கி அந்நியராட்சிக்கு அடிமைப்பட்டிருந்த ஒரு காலமாகும். இந்தச் சூழ்நிலையிலே சிந்தித்துச் செயலாற்றினார் நாவலர் பெருமான். சைவத்தையோ தமிழையோ தனித்தனி வளர்ப்பது இயலாதது என்று கண்டு இணைத்து ஒன்றாய் வளர்க்க வழிகாட்டினார். தானே வளர்த்துங் காட்டினார். இத்தகைய மகத்தான பணிபுரிந்த பெருமானுக்குச் சென்ற நூற்றாண்டில் சைவஉலகம் பாராட்டைத் தெரிவித்தது. அவருடைய நூற்றாண்டு விழாவையொட்டி ஈழத்தில் சிறப்பு மாநாடுகள் நடைபெற்றன. அன்னாரின் உருவச்சிலை அழகுக் கோலத்துடன் திருவுலாச் செய்யப்பட்டு யாழ்ப்பாணத்து நல்லூரில் நிறுவப்பட்டது. சென்ற நூற்றாண்டில் அவர்களாற்றிய சேவையைச் சைவத்தமிழ் மக்கள் என்றுமே மறக்க முடியாது.

கருவிலே திருவுடையாராக அவதரித்த "நாவலர்" அவர்களுடைய பின்ளைத் திருநாமம் ஆறுமுகம் என்பது. இவர்களின் முன்னோர்கள் சைவப்பற்றும் சீவகாருண்யமும் உடையவர்கள். அவர்களில் ஒருவரான ஞானப்பிரகாசம் என்பவரே பசுக்கொலைக்கு அஞ்சி இரவோடிரவாக யாழ்ப்பாணத்தை விட்டு இந்தியாவுக்குச் சென்றவராவார். அங்கு சிதம்பரத்தின் கண்ணே எழுந்தருளியுள்ள தில்லையம்பலரை வணங்கித் தமது மரபில் ஒரு சற்புத்திரர் தோன்றி இந்த நிட்டுர நிலையை நீக்கி சைவமக்களுக்கு விமோசனமளிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார். அவ்வழிபாட்டையேற்றுக் கொண்ட இறைவன் அருளினாற்றான் ஆறுமுகம் 1822ல் நல்லை நகரிலே அவதரித்தார். இளமையிலேயே மேதாவிலாசமுடையராயும் கூர்ந்த மெய்ஞானமுடையவராயும் விளங்கினார். தந்தையார் கந்தப்பிள்ளை சிறந்த அறிஞர். கலைப்பிரியர். அவர் பாடி குறையிலே விட்டுச்சென்ற நாடகத்தை ஆறுமுகம் ஏழாம் வயதிலேயே பூர்த்தி செய்தார். வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் ஐயந்திரிபுறக் கற்றார்.

அன்று ஆங்கிலக்கல்வி கற்கும் வாய்ப்பு மிஸனரிமாருடைய கல்வி ஸ்தாபனங் களிலேயே கிடைத்தது. அங்கேயே சேர்ந்து ஆங்கிலக் கல்வியைக் கற்று வித்தகத்தன்மையைப் பெற்றதுமன்றித் தமிழ்ப்பண்டிதராகவும் அங்கு கல்வி கற்பிக்க அமர்த்தப்பட்டார். இதே காலத்தில் பார்சிவல் துரையினுடைய பாராட்டு அவருக்கு நிரம்பக் கிடைத்தது. விவிலிய நூலைத் தமிழிலே மொழி பெயர்க்கும் பணியில் பெரும் புகழீட்டினார். இதனால் கிறிஸ்தவர்களும் இவருடைய வித்துவத்தைப் போற்றினார்கள். பார்சிவல் பாதிரியார் அவர்கள் தமக்குத் தமிழ் கற்பிக்குமாசானாக நாவலர் அவர்களையேற்றுக் கொண்டார்.

தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் வேதாகமப் புராணங்களையும் கசடறக் கற்ற சிறப்பினால் பிழையற எழுதவும் நன்றாகப் பேசவும் ஆற்றலுடையவரானார். இவருடைய பேச்சாற்றலை வியந்த திருவாவடுதுறை மகா சந்நிதானமானவர்கள் கற்றாரவைக்கண் "நாவலர்" என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தார்கள்.

"ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன்
வார்த்தைபதி னாயிரத் தொருவர்"
-றாம்புலவர்

என்று சொல்வது வழக்கம். வாக்கு வன்மை சாதாரணமாக எல்லோருக்கும் கிடைக்கும் பேறு அல்ல. நாவன்மை மிக்க நாவலர் அவர்கள் சென்ற நூற்றாண்டில் "பிரசங்கம்" என்ற நிகழ்ச்சியை ஆலயங்களிற் தொடங்கி வைத்தார். அன்று பாவலர் முதல் விருத்தர் வரையிலும்

பண்டிதர் முதல் பாமரர் வரையிலும் இவர் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயனடைந்தனர். நூற்றுக்கணக்கான நூல்களை விழுந்து விழுந்து படித்தாலும் அவற்றிலுள்ள கருத்துக்கள் பலர் மனதிற் படியமாட்டா. இக்குறைபாட்டை ஓரளவு சொற்பொழிவுகளால் நீக்கலாமென்பதை நாவலர் பெருமான் செய்து காட்டினார். வேதாகம உண்மைகளையும் புராண சாரங்களையும் விளக்கி, சிவநெறியின் தொன்மையும் சிவ பரம்பொருளின் பேரருட்டிறனும் விளங்கச் சொன்மாரி பொழிந்தவர் இவர். இவருடைய சொற்பொழிவில் பக்தி, வீரம், நகைச்சுவை, வியப்பு யாவும் ஒருங்கு கலந்து மிளிரும். இவருடைய விரோதிகளும் தம் பகை மறந்து கைகட்டி வாய்புதைத்து வாளாவிருந்து பிரசங்கங்களைக் கேட்டனரென்பதை நாமறிகிறோம்.

"சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது".

என்றார் வள்ளுவர். சைவமென்னும் பயிரை வளர்க்கப் பிரசங்கமென்னும் மழையைப் பெய்விக்க வேண்டுமென்பதுதான் அவர் கண்ட புதுவழி. இதன்படி வெள்ளிக்கிழமைகள் தோறும் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலில் பிரசங்கம் செய்து வந்தார். இவரது பிரசங்கத்தால் நன்மையடைந்தோர் மிகப்பலர். ஆனால் சொல்லுதலெளிது. சொல்லியபடி நடப்பதுதான் மிகவரிது என்பர். நாவலரவர்களோவென்றால் தான் எதனை அனுட்டித்தாரோ அதனையே மற்றவர்களுக்குச் சொன்னார். மாமிச போசனமமும் மதுபானமும் மனிதனை அரக்கனாக்குவது என்பதை அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டி விளக்கினார். இதனைக் கேட்டு மனந்திரும்பிய பலர் அத்தீய பழக்கத்தைக் கைவிட்டனர். வீணரோடு கூடித்திரிந்து தமது நேரத்தை அவப்பொழுதாகக் கழித்த பலர் இவர் சொற்பொழிவுகளைக் கேட்பதிலே காலத்தைப் பயனுடையதாக்கினர். ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் இவர் தொடர்ந்து பிரசங்கங்கள் செய்தார். தமிழகத்திலும் சைவப்பிரசங்கங்கள் பலவற்றை யாற்றியபோது சித்தாந்தத் தெளிவையும் செந்தமிழ் நடையையும் பக்திச்சிறப்பையும் ஒருங்கே கண்டு பலர் வியந்தனர். இவருடைய பேச்சில் இலக்கண வழுக்கள் மருந்துக்குமில்லை. சொற்பஞ்சமின்றி எவருக்கும் விளங்கப் பேசும் ஆற்றல் அக்காலத்தில் வேறெவரிடமும் காணமுடியாமலிருந்தது.

நெற்றிக்கண்ணைக் காட்டியபோதும் உன்பாடல் குற்றமே குற்றமென்று எடுத்துக் கூறிய நக்கீரர் பரம்பரையில் வந்தவர் தான் நமது நாவலர் பெருமான். குற்றங்கண்டவழி எவரையும் கண்டித்துப் பேசுந்தன்மை இவருக்குண்டு. ஆனால் கண்டிக்கப்பட்டோர் திரும்ப இவரை எதிர்த்துப் பேசியதே கிடையாது. ஏனெனில் அழகும் சாதுரியமும் அமைந்த அவரின் கண்டிக்கும் முறையில் அவர்கள் அடங்கியிருந்தனர். இதனால் கேட்பவர் யாவரும் மதுவுண்டு மயங்கும் மதுகரமொப்ப மயங்கி விடுவர். சைவத்தை இழித்தும் பழித்தும் பாதிரிமார் போதனை செய்தனர். அதனை ஏற்று அடிமை வாழ்வைப் பல தமிழ் மக்கள் மேற்கொண்டு சிறிய சலுகைகளை நோக்கிப் பெரியதோர் பண்பாட்டை இழந்து நின்றனர். இவர்களை ஆணித்தரமான முறையிற் கண்டித்தார் நாவலர். இதனாற் பாதிரிமார் வாயடைத்ததுமல்லாமல் நெறிமாறிய தமிழரும் சைவத்துக்குத் திரும்பினர். இதே நேரத்தில் நாவலரைப் பலர் எதிர்த்ததுமுண்டு. எந்த எதிர்ப்பின் மத்தியிலேயும் "சிவனுண்டு பயமில்லை" யென்று வாழ்ந்தார் நாவலர் பெருமான்.

அடுத்து அவருடைய எழுத்துப்பணியைக் கவனிப்போம். கிறிஸ்தவ குருமார்கள் தமது மதத்தைப் போதிப்பதற்கும் பரப்புவதற்கும் எவ்வாறு பிரசுரங்களை வெளியிட்டார்களோ அவ்வாறே சைவத்தைப் பரப்புதல் நலமெனக் கண்டார் நாவலர். திருமுறைகளின் சாரத்தை யடக்கியும் சைவ சித்தாந்த உண்மைகளை விளக்கியும் பாலபாடம், சைவவினாவிடை முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். செய்யுள் நடையிலிருந்த பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் என்ப வற்றை வசனநடைக்கு மாற்றினார். அடியார் பெருமையையும் திருத்தொண்டின் மகிமையையும் விளக்கிப் பெரியபுராண சூசனம் என்ற நூலை ஆக்கினார். சிவாலய வழிபாட்டு முறைகள் இவர் நூல்களால் மிகத்தெளிவாக்கப்பட்டன. நன்னூற்கண்டிகையுரை, இலக்கணச்சுருக்கம் என்பனவும் உயர்தர வகுப்பு மாணவர்க்கேற்ற முறையில் வெளியிடப்பட்டன. ஏடுகள் பலவற்றையும் துருவியாராய்ந்து திருக்கோவையார் முதலிய , பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த பெருமையும் இவரையே சாரும். நாவலர் பதிப்பு ஒன்றே பிழையில்லாத பதிப்பு என்ற பெயர் அன்றும் இன்றும் நிலவுகிறது. தமிழில் இனிய வசனநடையைத் தொடக்கி வைத்த பெருமையும் நாவலருக்கேயுண்டு.

"அன்னநடை பிடியினடை அழகுநடை
யுல்லவென அகற்றி அந்நாட்
புன்னுதமிழ்ப் புலவரிடம் செய்யுனடை
பயின்றதமிழ்ப் பாவை யாட்கு
வன்னநடை வழங்கநடை வசனநடை
எனப்பயிற்றி வைத்த ஆசான்
மன்னுமருள் ஆறுமுக நாவலன்றன்
ஒழுக்கநடை போல வாழி".

என்று பாராட்டினார் யாழ்ப்பாணத்து நவாலியூர்ச் சோமசுந்தரப்புலவர். இன்னும் "வசனநடை கைவந்த வல்லாளர்" எனவும் போற்றப்பட்டார். தமிழ் வசனநடைக்குப் புதுவடிவங் கொடுத்ததோ டமையாது தரிப்புக்குறிகளையுமிட்டுப் புதுமை செய்தார். முதன் முதல் இப்பணியிலீடுபட்டவர் இவரே. சொற்களையோ சொற்றொடர்களையோ வசனங்களையோ பிழையின்றி எழுதுவதிலும் பதிப்பதிலும் இவருக்கு நிகர் இவரே.

சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பணி யாற்றவேண்டுமானால் அச்சுக் கூடங்களை அமைத்து நூல்களை வெளியிட மேண்டுமென்றும் பாடசாலைகளைத் தாபித்து இலவசக் கல்வியளிக்கப்பட வேண்டுமென்றும் அவருடைய சிந்தனையிற் பட்டது. இதற்கான நிதியைத் திரட்டுவதிலும் பெரும்பாடுபட்டார். அயரா உழைப்பின் பேரால் வண்ணார் பண்ணையிலும் சிதம்பரத்திலும் வித்தியா சாலைகளை அமைத்து அச்சுக்கூடங்களையும் நிறுவினார். இறைவனருளால் அவ்வப்போது இதற்காய பணவுதவி கிடைத்தது. 1850ஆம் ஆண்டு முதன் முதல் இலவசக்கல்வியைத் தொடங்கி அளித்த மகான் நாவலர் பெருமான் அவர்களே. இந்த நிறுவனங்களின் மூலம் வருடாவருடம் தமிழையும் சைவத்தையும் முறையாகப் போதிக்கக் கூடிய போதகாசிரியர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் தோன்றினர். இன்றும் அந்தக் கலவிப் பரம்பரையிலே வந்த ஒரு சிலரே இப்பணியிலுழைத்து வருகின்றரென்றால் அதில் மிகை யொன்றுமில்லை. அவராக்கிய நிறுவனங்கள் இன்றும் பெரும்பணியாற்றி வருவது கண்கூடு.

நாவலர் பெருமானை, சென்ற நூற்றாண்டிலே நம் நாட்டிலேயவதரித்த "ஐந்தாம் குரவர்" என்று பலரும் போற்றுவர். இதனால் வருடாவருடம் மார்கழித் திங்களில் இவருடைய குருபூசை விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாட்டு இளஞ்சந்ததியினருக்கு நாவலர் எழுதிய சைவ வினாவிடை முதலிய நூல்கள் கற்பிக்கப்படவேண்டும். இன்று வெண்ணீறு பூசுவோர், விரதமனுட்டிப்போர், திருவிழா எடுப்போர், பிரசங்கம் செய்வோர், புராணபடனமாற்றுவோர் யாவரும் நாவலர் ஐயா அவர்களின் வழியையே பின்பற்றிச் செல்கின்றனர். அவரே எமக்குக் குரு. இவர் நால்வர் வழியில் நின்றதுமன்றி நிற்கவும் எமக்கு வழிகாட்டினவர். அவருடைய சமயமுறையைப் பற்றி மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் கூறுகிறார்.

"கருள்விரவு தலைக்கழிக்கும்
கண்மணியும் வெண்ணீறும்
பொருள்விரவும் ஐந்தெழுத்தும்
பொருளாகக் கொண்டுவப்போன்
தெருள்விரவு சுத்தசைவ
சித்தாந்தப் பெருஞ்செல்வன்
அருள்விரவு பரவுபுகழ்
ஆறுமுக நாவலனே."

நமது நால்வர் பெருமக்களும் இதே வாழ்க்கையையே வாழ்ந்தார்கள். சைவத்தை நிலைநாட்டினார்கள். திருமுறைகளைத் தந்தார்கள். சிவாலய தரிசனஞ் செய்தார்கள். மறு சமயத்தின் தாக்குதலைத் தடுத்தார்கள். அரசியல், சமுதாயம் என்பவற்றிற் புகுந்து ஆகும் நெறிக்கு வழிகாட்டினார்கள். அதே வரிசையில் பெரும்பணியாற்றியவர் நாவலர் ஐயா அவர்கள். பெரும் பஞ்சம் ஒன்று சென்ற நூற்றாண்டில் எமது யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது. அதனைப் போக்குவதற்குக் கஞ்சித்தொட்டித் தர்மம் ஒன்றை ஏற்படுத்தினார். இதனால் பலர் பட்டினி தீர்ந்து நலமடைந்தனர். நாட்டிலே கொடிய கொள்ளை நோய் தோன்றி மக்களுயிரை வதைத்த போது உடனடியாக அதனை அரசியலாருக்கு அறிவித்து ஆவன செய்து நாட்டுநலனைப் பேணி மக்களுக்கு வாழ்வு கொடுத்தார். தமிழ்ப் பெருந்தலைவராகச் சேர் பொன் இராமநாதனைச் சட்டசபைக்கு அனுப்பி வைத்தார். இவ்வாறு மகத்தான சமூகப்பணிகளாற்றி சமுதாய நலனைக் கண்ணுங்கருத்துமாகப் பேணியவர் அவர். அவர்கள் வழியிலே நாமும் சிறிது சென்று சைவத்தையும் தமிழையும் பேணி நாட்டுமக்கள் உள்ளத்திலே தூயவாழ்வை நிறுவவதற்கு வழிகாண்போமாக.

"ஆருர னில்லைப் புகலியர் கோனில்லை
-அப்பனில்லைச்
சீருரு மாணிக்க வாசக னில்லைத் திசையளந்த
பேரூர மாறு முகநா வலனில்லைப் பின்னிங்கியார்
நீருரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கும்
- நீர்மையாரே".

*******

# நெறியறியேன் நின்னையே அறியேன் நின்னையே அறியும் அறிவறியேன்!!

'கார்பே ரீம்' "Carpe Diem" என்பது ஒரு பிரபலமான லத்தின் மொழி வாசகம்.

ஏதோ வீராவேசமான போரட்ட கோஷம்போல் உச்சரிக்க சுகமாக ஜம்மென்று தான் இருக்கிறது. ஆனால் இதன் அர்த்தம்? 'Sieze the moment' அதாவது இந்த விநாடியைக் கைப்பற்றிக் கொள். சந்தோஷமாக வாழ்ந்து கொள் என்பது தான் இந்த வாசகத்தின் நேரடிப்பொருள். வாழ்க்கை வாழ்வதற்கே என்பது அதன் உள்ளர்த்தம். முன்பு எப்போதோ தங்களுக்கு நேர்ந்த சோகங்களை, தோல்விகளை, சரிவுகளையெல்லாம் நினைத்துக்கொண்டு, எந்நேரமும் கவலையோடு உட்கார்ந்து இருக்கிறவர்களைத் தட்டியெழுப்பி, 'அதையெல்லாம் மறந்துவிடுறங்கள், இந்த விநாடியை உற்சாகமாக அனுபவியுங்கள்' என்று அறிவுரை சொல்கின்றது "Carpe Diem" ஹொராஸ் என்ற லத்தீன் கவிஞர் எழுதிய ஒரு பழைய கவிதையிலிருந்து எடுக்கப்பட்ட இந்த வாசகம், நவீன இலக்கியம், இசை, திரைப்படங்கள் எனப்பலவற்றிலும் இடம்பெற்று பல தலைமுறைகளை உற்சாக மூட்டியிருக்கிறது.

மனித வாழ்க்கை மிகக் குறுகியது. ஆகவே நடந்தவை, நடக்கக்கூடியவைகளைப் பற்றி எல்லாம் யோசித்துக் கொண்டிருக்காமல் இன்றைய பொழுதை நல்ல படியாக வழவேண்டும் என்று சொல்லும் இந்தத் தத்துவத்தை, மிக இளம் வயதிலிருந்தே குழந்தைகளின் மனத்தில் பதித்தால், அவர்கள் தோல்விகளால் துவண்டுபோகாத மனிதர்களாக வளர்வார்கள் என்கிறது புதிய சிந்தனை. இந்தச் சிந்தனையின் அடிப்படையில் சிங்கப்பூரில் பல சிறுவர் பாடசாலைகள் "Carpe Diem" தொடங்கப்பட்டுள்ளன. பாடசாலைகள் என்றே அழைக்கப்படும் இவற்றில் குழந்தைகள் அவர்களின் வயதுக்கேற்ற பல்வேறு விஷயங்களைக் கற்பதுடன், வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியையும் அனுபவிக்கிற "Carpe Diem" சந்தோஷத்தையும் பழகிக் கொள்கின்றார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட இந்த "Carpe Diem" பாடசாலைகள் M1 எனப்படும் பன்முக அறிவு-அதாவது அடிப்படையில் தங்களது பாடத்திட்டங்களை அமைத்திருக்கிறார்கள். M 1 தத்துவத்தை அறிமுகப்படுத்தியவர், ஹவார்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்வியாளர் Dr. Howard Gardner. நாம் 'அறிவு' அல்லது 'புத்திசாலித்தனம்' என்று பொதுவாகச் சொல்வதைப் பலவிதமாகப் பிரித்து, மொத்தம் ஏழு விதமான அறிவுகள் உண்டு. மொழி அறிவு என்பது, பேசுகிற, எழுதுகிற வார்த்தைகளைக் குறிக்கிறது. இந்த அறிவை அதிகம் கொண்ட குழந்தைகளால், மற்றவர்கள் பேசுவதை எளிதில் புரிந்து கொள்ளமுடியும். கடினமான வார்த்தைகளைக் கூடச் சட்டென்று பிடித்துக்கொண்டு பேசமுடியும். இலக்கண விதிமுறைகள், கதை, கவிதை, கட்டுரை போன்ற விஷயங்கள் இவர்களுக்குச் சுலபத்தில் வசப்படுகின்றன.

இசை அறிவு அதிகமுள்ள பிள்ளைகளுக்கு, பாடல்களைக் கேட்பது, அவற்றின் மெட்டு, பயன்படுத்தப்பட்டிருக்கும் இசைக் கருவிகள், தாளம் போன்றவற்றைக் கவனிப்பதில் அதிக ஆர்வம் இருக்கும். வருங்காலத்தில் இவர்கள் நல்ல பாடகர்களாகவோ, இசைக் கலைஞர்களாகவோ வரக்கூடும்.

கணித-தர்க்க அறிவுதான் நாம் குழந்தைகளிடம் அதிகம் எதிர்பார்ப்பது. இரண்டு எண்களைக் கூட்டி விடை சொல்வதில் தொடங்கி இது இப்படியானால் அது எப்படியாகும் என்பது போன்ற தர்க்க ரீதியிலான சிந்தனையெல்லாம், சில குழந்தைகளுக்குப் பிரமாதமாக வரும். பல்வேறு பொருள்களுக்கிடையிலான தொடர்புகளை நினைவில் வைத்திருந்து, சரியான நேரத்தில் பயன்படுத்தி அசத்துவார்கள்.

நம் ஊரில், 'கண்பர்ப்பதைக் கை செய்யும்' என்று ஒரு வாசகம் சொல்வார்கள். அது தான் இந்த நான்காவது வகையான காட்சி அறிவு. காட்சிபூர்வமாகப் பொருள்களைப் பார்த்து, வகைப்படுத்தி அறிவது, தாங்கள் பார்த்ததை அப்படியே திரும்பச் சொல்வது, செய்வது, அல்லது வரைந்து காண்பிப்பது போன்ற திறமைகள் இந்த வகையில் அடங்கும்.

அடுத்த அறிவு, உடலைச் சரியாகப் பயன் படுத்துவதைக் குறிக்கிறது. உதாரணமாக, ஒரு பந்தைக் குழந்தையின் மீது எறிந்தால் சட்டென்று கைகளை நகர்த்தி அதைப் பிடிப்பது. பொதுவாக எல்லாக் குழந்தை களுக்கும் இந்த அறிவு உண்டு. எனினும் சிலர் இதில் விற்பன்னார்களாக உருவாவதைப் பார்க்கலாம். இவர்கள் விளையாட்டு, நடனம் போன்றவற்றில் சிறந்து விளங்குவார்கள்.

ஆறாவது 'அகஅறிவு' எனப்படுகிற உள்ளுணர்வுகளைப் புரிந்து கொள்ளும் கலை. அடுத்தவர்களின் குறிக்கீடு இல்லாமல், பல விஷயங்களைப் பற்றித் தங்களுக்குள் சிந்திப்பது ஒரு முடிவுக்கு வருவது எனத் தொடங்கி தத்துவ அலசல்களில் ஈடுபடுவது. கவிதைகள் எழுதுவது என்று பல்வேறு நுணுக்கங்கமான விஷயங்கள் இந்தப் பிரிவின் கீழ் வருகின்றன.

கடைசியாக, தங்களுடைய செயல்கள் மற்றவர்களை எப்படி பாதிக்கும், அவர்களுடைய உணர்வுகள், எதிர் வினைகள் எப்படி இருக்கும் என்றெல்லாம் சிந்தித்துப் பழகுகிற 'புறஅறிவு' இந்த அறிவைக் கொண்ட குழந்தைகள், பிறருடன் நன்கு பழகுவார்கள். கலந்துரையாடல்கள், விவாதங்களில் ஈடுபடுவார்கள், மற்றையவர் களைத் தங்களின் கருத்தை ஏற்கும்படி சமாதானப்படுத்துகின்ற கலையும் இவர்களுக்கு நன்றாக வரும். பின்னாள்களில் இவர்கள் ஆசிரியர்களாக, நல்ல பெற்றோராக, பலரை வழிநடத்தும் தலைவர்களாக வருகிற வாய்ப்பு உண்டு.

இப்படி அறிவை ஏழு வகையாகப் பிரித்து அலசியிருக்கும் Dr. Howard Gardner ஒவ்வொருமனிதருக்கும் இவற்றுள் எந்த அறிவுகள் அதிகம் இருக்கும், எந்த அறிவுகள் குறைவாக இருக்கும் என்கிற சதவிகிதம் வேறுபடும் என்கிறார்.

வளர்ந்த மனிதர்களுக்கே இப்படியென்றால், சின்னக்குழந்தைகள் எல்லோருக்கும் இந்த அறிவுகள் எல்லாம் நிறைந்திருக்கும் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. ஆகவே எந்தக் குழந்தைக்கு எந்த விதமான ஞானம் உள்ளது என்பதை அறிந்து, அதை மேலும் வளர்ப்பதற்கான பயிற்சிகளை வளங்குவது தான் M 1 கல்வி முறை. பாடம் படிப்பது, பிறமொழிகளைக் கற்றுக்கொள்வது, பாட்டுப்பாடுவது, நடனம் ஆடுவது, தபேலா வாசிப்பது, நீச்சலடிப்பது, காற்பந்து விளையாடுவது, என்று எல்லாவற்றையும் நம் குழந்தைகள் செய்தாக வேண்டும் என்று ஒரேயடியாக எதிர்பார்ப்பதைக் காட்டிலும், அவர்களுடைய இயற்கையான திறமை என்ன என்பதை அறிந்து, அதில் அதிக கவனம் செலுத்துவதால், இந்தக் கல்வி முறைக்கு நல்ல வரவேற்பு இருக்கின்றது. இதில் நம் குழந்தைகளுக்கு குறைபாடு ஏதாவது இருந்தால் அதை மேம்படுத்துவதற்கு விசேட பயிற்சிகளும் இருக்கின்றன.

சுருக்கமாகச் சொன்னால், எல்லாக் குழந்தைகளையும் ஒரு வகுப்பில் உட்காரவைத்து, எல்லோருக்கும் ஒரே மாதிரியாகப் பாடம் நடத்துகிற கால மெல்லாம் போய்விட்டது. ஒவ்வொரு குழந்தைக்கும் வெவ்வேறு விதமான அறிவுகள் இருக்கின்றன. சில அறிவுகள் குறைபடுகின்றன. சிலதை அவர்களால் வேகமாகக் கற்றுக்கொள்ள முடியும். சிலது மெதுவாகத்தான் வரும், அல்லது வரவே வராது.

ஆகவே குழந்தைகளின் தன்மைக்கேற்ப, அவர்கள் கற்கும் முறைக்கேற்ப பாடத்திட்டங்களை மாற்றியமைத்து, ஒவ்வொரு பிள்ளைக்கும் சிறப்புக் கவனத்துடன் கல்வி புகட்டுவது, இந்த விநாடியை அனுபவித்துக் கற்கும் சந்தோஷத்துக்கு அவர்களைப் பழக்கப் படுத்துவது- இவை தான் நாளைய பாடசாலைகளின் அடையாளமாக இருக்கப் போகின்றன.

**நன்றி- என். சொக்கன்-குங்குமம்**

# VERENIGING SRI VARATHARAJA SELVAVINAYAGAR
# ஐரோப்பாவில் இந்து சமய வரலாற்றுப்பதிவு



இறைபத்தியுள்ள அன்பர்கட்கு,நாம் எமது தாய்நாட்டை பிரிந்து வெளிநாடுகளில் பரந்து வாழ்கிறோம். நாம் இந்த நாடுகளில் வாழும்காலத்தில், எமது எதிர்காலச் சந்ததிக்கு பெருமைசேர்க்க நல்ல காரியங்களைச் செய்து வைக்கவேண்டியது எமது கடமையாகும். நாம் இங்கு வாழ்ந்தாலும் எமது இந்து சமயத்தைப் பின்பற்றி வருகிறோம். நாமோ எமக்குபின் வரும் எங்கள்சமுதாயமோ எவ்வளவு காலம் இந்த மண்ணில் வாழ்கிறோம் என்பது முக்கியம் அல்ல ஆனால் நாம் இந்த மண்ணில் வாழும்போது எமது இந்துசமையத்தைப்பின்பற்றி வாழ்கிறோம் என்ற வரளாற்றுப்பதிவு தான் முக்கியமானதாகும். இந்தநோக்கில் ஐரோப்பாநாட்டில் ஒன்றாகிய கொலன்ட் நாட்டில் வாழும் சிறுதொகை இந்துசமையத்தவர்கள் முயற்சியால், ஓர் இந்து ஆலயம் கட்டுவதற்கு காணி வாங்கப்பட்டு, அந்தக்காணியில் ஒர் அழகான விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டு 2003ஆம் ஆண்டு மகாகும்பாபிசேகம் நடத்தப்பட்டுள்ளது. நிரந்தரமாக ஆகமமுறைப்படி கட்டப்பட்ட ஆலயத்தின் உள்தோற்றம் அழகாக காட்சியளிக்கிறது. பல அடியார்கள் பல நாடுகளில் இருந்து வந்து ஆலயத்தை தரிசித்து மகிழ்கிறார்கள். இந்துசமயத்தவர்கள் ஐரோப்பாவில் வாழ்வதற்கான அடையாலச் சின்னமாக இவ் ஆலயம் விளங்கப்போகிறது என்பதை கட்டியம் கூறுகிறார்கள். கொலன்டில் வாழும் சிறுதொகை இந்துக்கள் முயற்சியால் காணிவாங்கி ஆகம முறைப்படி ஐரோப்பாவில் கட்டப்பட்ட முதலாவது விநாயகர் ஆலயம் என்ற பெருமையுடன் இந்த ஆலயம் திகழ்கிறது. இது உலகெங்கினும் பரந்து வாழும் இந்துக்கள் பெருமைப்படவேண்டிய விடையமாகும்." அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்ற பொன் மொழிக்கு ஏற்ப எமது தாய்நாட்டில் ஒன்றாக வாழ்ந்த நாம் தற்போது பலநாடுகளில் பிரிந்து வாழ்ந்தாலும், நாம் எல்லோரும் ஒருதாய்மக்கள் என்ற உணர்வுடன் வாழ்ந்தால் நாம் மிகபலமானவர்களாக வாழலாம். இதனால் இந்துசமயத்தை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும்.பலஆயிரம் வருடங்கள் பழமைவாய்ந்த சிற்பக் கலையை ஆலயங்கள் மூலம் வெளிக் கொண்டு வருவதால் எம் இனத்தின் கலை மற்றும் சமயப் பெருமையை ஏனையோரும் அறியவைக்க முடியும். ஓர் முன்னேற்ற நாகரிகத்தை யுடையவர்கள் நாங்கள் என்று எமது எதிர் காலச் சிறுவர்களும் பெருமைகொள்வார்கள்.

பரந்துவாழும் இந்துக்களுக்கு ஒரு வேண்டுகோள். கொலன்வாழ் இந்துக்களின் முயர்ச்சியால் ஆரம்பிக்கப்பட்ட ஆகமமுறை ப்படியான ஆலயத்தின் 54ஆடி உயரமான இராஜகோபுரதிருப்பணி வேலைகள் 2008ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளது.பலநாடுகளில் இராஜகோபுரம் அமைத்த அனுபவமுள்ள - ஸ்தபதிகளின் மூலம் கட்டப்படவிருக்கும் வரலாற்று முக்கியம் வாய்ந்த இந்த இராஜகோபுரத் திருப்பணியில் பரந்துவாழும் எல்லா இந்துக்களும் பங்குபற்றவேண்டும் என்று விரும்புகிறோம். எமது ஒற்றுமையின் சின்னமாக இந்த இராஜகோபுரம் திகழவிருப்பதால், எங்கள்வாழ் நாளில் கட்டப்பட்டு எமக்குப்பின்னும் பலநூறு ஆண்டுகள் நிலைத்து நிரந்தரமாக நிற்கப்போகும் இந்த சரித்திரபதிவாகும் இராஜகோபுரதிருப்பணியில் ஒவ்வொருவரது சிறுபங்களிப்பாகிலும் இடம்பெற வேண்டும் என்று விரும்புகிறோம். இந்த இராஜகோபுரத்திருப்பணி முடிவுற்று இதற்கான கும்பாபிசேகம் நிறைவுற்று இந்த ராஜகோபுரத்தை நேரடியாகவோ படத்திலோ பார்க்கும் போது, எமது பங்களிப்பும இந்த ராஜகோபுரம் நிமிர்ந்துநிற்கஉதவியது என்ற பெரும் மனநிறைவு ஏற்படும். அன்பார்ந்த அடியார்களே! ஏம்வாழ்வில் எமது கைக்குவரும் பணம் எத்தனையோ செலவுகளுக்காக எம்கைை யவிட்டு சென்று விடுகிறது. இன்னும் எத்தனையோ செலவுகள் எம்வாழ்நாளில் வரத்தான் போகிறது. ஆனால் ஓர் ஆலயத் திருப்பணிக்காக எம்கையால் செய்யப்படும் ஒரு சிறு பங்களிப்பு நிலையான ஒருபெரும் பொருளாகி என்றும் காட்சிதரப்போகிறது. இந்தசந்தர்பத்தை நீங்கள் தவறவிடாது பயன்னடுத்தி இறைஅருளை பெற்று சிறப்புடன் வாழ இறைவனைப் பிராத்திக்கிறோம்.

**பணம் அனுப்பவேண்டிய வங்கிஇலக்க விபரம்:**

**VERENIGING SRI VARATHARAJA SELVAVINAYAGAR A/c No: 58 73 18 538 ( ABN- AMRO bank) Den Helder, Netherland(IBAN: NL08 ABNA 0587318538)(BIC: ABNA NL 2A)**

**சைவமாநாடு ஒருங்கிணைப்புக்குழு. - நன்றி -**


Arthy
Jewellers
ஆயிரங்கபலத்துப் பயிருக்கு
ஆண்டாண்டு பாரம்பரியம்
உள்ள தங்க நகைகள்
294 High Street North
Eastham London E12 6SA
Tel : 020 8552 1080


Lakshmis
Jewellers
இன்றைய நாகரீகத்திற்கேற்ற
நகைகளை
நீங்கள் விரும்பிய டிசைன்களில்
தேர்வு செய்திட
வாருங்கள்!!!
Lakshmis Jewellers
276 High Street, North Eastham
London E12 6SA
Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448

ஸ்ரீவள்ளி ஸ்ரீவள்ளி

Sri Valli's



**வண்ணமயமான நகைகள் புது மணம் வீசும் மலர்கள்**
**தமிழ் மணம் வீசும் மதுரை மல்லிகை தினமும்**

உங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமணம், சீமந்தம், பூப்பு புனிதநீராட்டல், சீமந்தம், மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கும், பண்டிகைகளுக்கும் தேவையான மலர் மாலைகளை நீங்கள் விரும்பும் வடிவத்திலும் வண்ணத்திலும் எண்ணம்போல் தயார் செய்து தரப்படும்.

உங்கள் செல்வங்களின் அரங்கேற்ற விழாக்களுக்கு (பரநாட்டியம், வீணை, மிருதங்கம், வயலின் போன்ற) தேவையான அனைத்து விதமான மலர் மாலைகளையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஆலயங்களுக்குத் தேவையான, சுப நிகழ்ச்சிகளுக்குத் தேவையான பூசைப் பொருட்கள், மாலைகள், வாழைஇலை, தோரணம், மாவிலை போன்றவற்றையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். மலர்கள், வில்வம், அரளி, துளசி, அறுகம்புல், மரிக்கொழுந்து, முல்லை, சம்பங்கி, ஜாதிமல்லி, மலர் மாலைகள், ஹோமத்திற்குத் தேவையான திரவியங்கள், அர்ச்சனைப் பொருட்கள் பரிசுப்பொருட்கள் என்பவை எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றைய நவநாகரிக உலகிற்கு ஏற்ற வகையில் புதிய முறையில் வடிவமைக்கப்பட்ட வண்ணமயமான நகைகள் மணப்பெண் அலங்காரப் பொருட்கள் புதிய வடிவ வண்ணமயமான வளையல்கள் பொட்டுக்கள் அனைத்தும் கிடைக்கும்.

**76, Church Road, Manor Park, London E12 6AF**

**Tel: 020 8514 7777**

Email: info@vallisuk.com

## ஆறுமுக நாவலர் உருவச்சிலை இலண்டன் ஸ்ரீ முருகன் கோயிலிருந்து ஊர்வலமாக சைவமுன்னேற்றச் சங்க மண்டபத்திற்கு கொண்டுவரப்பட்டபோது.....









சங்கத்தின் மாதாந்த நிகழ்வுகளில் நால்வர் தமிழ்க் கலை நிலைய மாணவர்களின் மங்கேற்பு





சைவ முன்னேற்றச் சங்க புதிய மண்டபம் திறப்பு விழா





என்பீல்ட் நாகபூசணி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் பெரியபுராண தொடர் சொற்பொழிவு





# 5. Gayatri Mantra

*Story* : **Lakshminarayanan and Vantu mama** *Graphics* : **Sankar**
*English Rendering* : **Prof. C.S. Ramakrishnan**




4
The brahmin agreed to Birbal's condition.
By repeating Gayatri mantra I get sufficient money to feed the family sumptuously. What an easy way!
5
The brahmin kept repeating Gayatri ten times daily. He got from Birbal the gold coins regularly as reward.
What a peace of mind I am able to get by repeating this mantra. At first I was repeating the mantra not devotedly but only for the sake of money. But now my mind is fully involved in it.
6
Presently the brahmin began to repeat the mantra with great devotion to Mother Gayatri without thinking of the reward. And as the chanting progressed his face also began to shine with a divine light.
7
One day Birbal visited the brahmin's house to find out how the brahmin fared. Birbal was not aware that the brahmin was repeating the mantra many times. Yet he could see that a great change had come over the brahmin.
Is this the man who looked so miserable the other day? What a change! What a divine glow on his face!
Sir, please come. By your mercy my family is happy with enough to eat. Many thanks.
All right. From now on you repeat the Gayatri mantra daily a hundred and eight times, why, even throughout the day. As reward I shall send you a thousand gold coins daily.


8
The brahmin agreed to this. From then he began to chant the mantra throughout the day with great devotion and purity of mind. As a result one day he heard the voice of Goddess Gayatri.
9
You began to chant my name for money. But now you do it with a full heart. Don't chant for money henceforward. I bless you that you will get without asking sufficient money for living a simple life. Lead a pure life as a great example to all the world.
10
After the Goddess's vision the brahmin continued to do the japa without thinking of the reward. As a result he obtained the grace of Mother Gayatri in full. He began to shine with a spiritual radiance.
His fame spread to all quarters. Men and women came to him in hundreds to receive his blessings. Some would also give him money as offering.
By seeing this great soul our worries disappear and we get peace of mind.
11
Why does not the brahmin come to collect money every month nowadays.
Is he thinking that to take money like that is also a form of begging and has to be avoided.
Let me go in person and see what is happening.


12
Revered Sir, how is it that you are not to be seen for the last few months? Here is the money due to you.
Sir, you may yourself keep that money. I do not want it anymore. I have obtained the grace of Mother Gayatri. I am able to live with full contentment. Nothing more is needed. My mind is engaged in chanting the mantra always. I am very much indebted to you.
Birbal saluted the brahmin and took leave.
13
Birbal went to the palace and informed Akbar about all that had happened.
How wonderful! I want to meet that great soul.
14
Along with Birbal the emperor went and met the brahmin in his house.
I regret having spoken in contempt when the other day you came begging. I understand fully well now the greatness of the Gayatri mantra. Please pardon me and bless me.

# THE DUALITY OF SHIVA AND SHAKTHI

## By Jayashree Naganathasivam

The Hindu religion is often misinterpreted as a faith in which the masculine dominates the feminine. There are certain points within Hinduism that prove this is not the case.

The Lord Shiva and the Eternal Mother Parvathi grace us in the form of 'Ardhanareswara' which depicts them as one body, half of which is the male Shiva and the other half the female Parvathi, the words 'Ardha', 'Nari' and 'Eswara' translating into 'half', 'woman' and 'Lord'. This form represents the synthesis of the masculine and the feminine and the equality of men and women and how both play important roles in life.



This equality is represented in another way as in the Agamas the Lord Shiva is described to be an endless beam of light, hence the form of 'Lingam', and the Goddess Shakthi as a force revolving around the beam. Together the two parts form the basic structure of the atom, the smallest particle on earth. This holds great significance as we can clearly see that Shiva and Shakthi are present in all beings proving that God truly is omnipresent.

Both these ideas demonstrate the truth of existence requiring the equal input of both the male and female beings and how they should collaborate alike to the various subatomic particles to form atom-like brickwork to create a world of righteous order.

We must also take into account the power and importance given to the Goddess Kali who in her anger is said to be unstoppable by none other than the Lord Shiva himself. During her almighty dance of Victory on the battlefield in which she had destroyed all the demons the energy that she exerted was so high and dangerous that the earth shook violently. When summoned by the other Gods, Shiva himself lay under her feet to absorb her energy.

The symbolism of Kali standing on her husband is as follows:

Shiva is the 'Divine Consciousness' whereas Shakthi is the 'Divine Energy'. The inactive Consciousness cannot yield without the active Energy and vice versa. Shakthi is the force and creative power within the pure consciousness which is Shiva. Therefore it is impossible for the two to be separate and act without one another.

We must also look at the three 'Devis', Lakshmi, Saraswathi, and Parvathi who are worshipped as contributors of wealth, wisdom, courage and much more. Without these female divinities the world would be in chaos. It is for this reason that we have the days of 'Navarathri' to thank them and pray for their eternal blessing.

# மனசாந்தி

## ரமணமகரிஷியின் உபதேசம்

ஆசிரமத்தில், தம் அடியார்களுடன் பகவான் ரமணர் தங்கியிருந்த போது துறவுவாழ்க்கை பற்றிய பேச்செழுந்தது. அதைப் பற்றி பகவான் விளக்க முனைந்தார். அதற்குகாக விருபாட்ச குகையில் இருந்தபோது நிகழ்ந்த நிகழ்வு ஒன்றைக் கூறி விளக்கம் அளிக்கலானார்.

விருபாட்ச குகையில் பகவான் தங்கியிருந்த போது சுந்தரேச அய்யர் பிட்சைக்காக ஊருக்குள் சென்று குகையில் இருக்கும் பகவான் உள்ளிட்ட அனைவருக்கும் உணவு கொண்டுவருவார். அப்படி அவர் கொண்டுவரும் ஆகாரத்தில் சில சமயங்ளில் தொட்டுக்கொள்ள காய்கறி அல்லது துவையல் என எதுவும் இருக்காது. பகவானுடன் அப்போது பலர் இருந்ததால் சுந்தரேசர் கொண்டுவரும் உணவு அனைவருக்கும் போதுமானதாக இருக்காது.

எனவே கொண்டுவந்த உணவை ஒன்றாகவே பகவானே சேர்த்துப் பிசைந்து அதனுடன் நிறைய வெந்நீர் சேர்த்து கஞ்சியாக்கி எல்லோருக்கும் தருவார். பகவான் கொடுக்கும் கஞ்சியை அனைவரும் பங்கிட்டுக் கொள்வார்கள்.

"சில நேரம் இம்மாதிரியான கஞ்சியில் உப்பு சேர்த்துக்கொண்டால் சுவையாக இருக்கும் என்று தோன்றினாலும் உப்பு வாங்குவதற்குக் கூட காசு அவர்களிடம் இருக்காது. அதனால் அருகிலுள்ள குகைகளில் வாசம் செய்பவர்களிடம் சென்று உப்பு கேட்க வேண்டி வரும்.

உப்பு கேட்டு வாங்கிக் கொண்டால் பின் ஒரு நாள் பருப்பு கேட்கலாம் என்று தோன்றும். கேட்பதை எல்லாம் மக்கள் கொடுப்பார்கள் என்பதும் எனக்குத் தெரியும். அதன் பின்னர் எது கேட்டாலும் கிடைக்கும் என்பதால் பாயசம் கேட்கத் தோன்றும். இப்படி இந்த ஆசைக்கு முடிவே இல்லாமல் போய்விடும்.

ஆகையால் யாரிடமும் சென்று எதையும் கேட்காமல் கிடைத்த கஞ்சியைக் குடித்து பரம திருப்தி அடைவோம். இதனால் எங்களுக்கு மன சாந்தியும் கிடைத்தது" என்று கூறியதோடு மேலும் தொடர்ந்தார்.

"விருபாட்ச குகையில் நான் இருந்தபோது எங்களிடம் பிட்சை எடுப்பதற்கென ஒரு மட்பாண்டம் தான் இருந்தது. சில நாட்களுக்குப் பிறகு, மண் பாண்டத்தற்குப் பதிலாக அலுமினியப் பாத்திரம் ஒன்றைக் கொண்டு வந்தார்கள்.



பிறகு அலுமினியப் பாத்திரத்திற்குப் பதிலாக பித்தளைப் பாத்திரம் என இப்படியான முன்னேற்றம் அத்தோடு நிற்க வில்லை. அடுத்து ஒரு டிபன் கரியரும் வந்துவிட்டது.
இப்படிப் பாத்திரங்கள் சேரச்சேர துறவிகள் விருபாட்சக் குகையிலேயே தாங்களே சமைக்கத் தொடங்கிவிட்டார்கள். இதெல்லாம் கூடாது என்று நான் தடுத்தும் அவர்கள் கேட்கவில்லை. அதனால் நம்முடைய தேவைகளுக்கும், ஆசை களுக்கும் முடிவு என்பதே இராது, என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வப்போது ஏற்படும் ஆசைகளுக்கு உடனுக்குடன் முடிவு கட்டிவிட வேண்டும். அவற்றை நிறைவேற்றிக்கொள்ள முயலக்கூடாது. அப்படி இருந்தால் தான் **மனசாந்தி** கிடைக்கும்" என்று ரமணர் தம் அடியார்களுக்கு விளக்கமாக உரைத்தார்.-

விஷ்ணுப்ரியா-

# கண்ணனும் தாத்தாவும்

-முத்து-

அன்று சனிக்கிழமை மத்தியானம். பங்குனி மாதம் என்றாலும் நல்ல வெய்யிலாக இருக்கிறது. கண்ணன் தமிழ்ப் பள்ளியால் எப்போ வருவான், இருவருமாக வெயிலில் உலாவிக் கொண்டு நூலகத்திற்குப் போய்வரலமென்று தாத்தா காத்திருக்கிறார். சூரிய ஒளி மக்கள் மனதில் எவ்வளவு உற்சாகத்தையும் தெம்பையும் தருகிறது. விசேசமாகக் குளிர் நாட்டில் வசிப்பவர்களுக்குச் சூரியனைக் கண்டதும் கடவுளைக் கண்டது போல மகிழ்ச்சியைத் தருகிறதே. சூரியனுக்கு மனதார நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றார் தாத்தா. ஏனென்றால் குளிராக இருந்தால் வெளியிலே போகவே மனம் வராதே. அப்போது கண்ணன் துள்ளிக்கொண்டு வந்து தாத்தா முன்னால் நிற்கிறான்.

**கண்ணன்:** தாத்தா நான் உங்களுக்கு பரிசு ஒன்று தரப்போகிறேன். கண்ணை மூடுங்கோ.

**தாத்தா:** என்னடா கண்ணா! தரப்போகிறாய். சரி கண்ணை மூடுகிறேன். (கண்ணை மூடிக்கொண்டு கையை நீட்டுகிறார்)

**கண்ணன்:** கலசத்தை (எல்லோருக்கும் இலவசமாகக் கிடைக்கும் ஆன்மிக இதழ்) கையில் வைத்து விட்டு இப்போ கண்ணைத் திறவுங்கள். இதோ! நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த கலசம்.

**தாத்தா:** ஆகா! ஆகா! ஏன் கனநாட்களாக வரவில்லையே என்று கவலைப் பட்டுக்கொண்டிருந்தேன்.

**கண்ணன்:** அதுதான் எனக்குத் தெரியுமே.!

**தாத்தா:** ஓ.....! வாரியாரா! மட்டையைப் பார்த்தபடி திறந்தவாய் மூடமறந்து ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டார் தாத்தா.

**கண்ணன்:** என்ன தாத்தா! இப்படி! உங்களை மறந்து உட்கார்ந்து விட்டீர்களே? இந்தப் பெரியவரை உங்களுக்குத் தெரியுமா?

**தாத்தா:** இவரைத் தெரியாதவர்களே இல்லையடா கண்ணா. எனது வயது ஒத்தவர்கள் பலரும் இவரை நேரிலேயே பார்த்திருப்பார்கள். இவரது படத்தைப் பார்த்ததுமே நான் என்னை மறந்தது உண்மை தான். இவரது முகத்தைப் பார்த்தாயா கண்ணா!
இவரது முகத்தில் அருள் பொழிகிறது. அன்பு இழையோடுகிறது. பக்தி பிரகாசிக்கின்றது. இந்த முகத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது இல்லையா கண்ணா!

**கண்ணன்:** ஆமாம் தாத்தா. அழகாக சிரித்துக்கொண்டிருக்றார். கோயிலில் இருக்கும் முருகன் சிலையைப் பார்க்கும் போது பக்தி வருகிறமாதிரி இவரது முகத்தை உற்றுப் பார்த்தால் எனக்கும் பக்தி வருகிறது.

**தாத்தா:** இதனைத்தான் "அகத்தின அழகு முகத்தில் தெரியும்" என்று பழமொழியாகச் சொல்வார்கள்

**கண்ணன்:** அகம் என்றால் என்ன தாத்தா?
தாத்தா: அகம் என்றால் மனம். ஒருவருடைய மனத்தில் ஏற்படும் உணர்ச்சிகளை முகம் மற்றவர்களுக்குத தெரியப்படுத்தும். உனக்கு எப்போதாவது கோபம் வரும்போதோ சந்தோசம் வரும்போதோ கண்ணாடியில் போய்பார். நான் சொன்னதன் உண்மை நன்றாகப் புரியும்.

**கண்ணன்:** நீங்கள் சொன்ன விதத்திலேயே எனக்கு நன்றாகப்புரிந்து விட்டது. இப்போ இந்தப் பெரியவரைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கோ தாத்தா.

**தாத்தா:** இவரின் முகத்தைப் பார்த்தவர்களுக்கு இவருடைய பக்தியும் ஆன்மிக உணர்வும் எவ்வளவு என்று தெரிந்து விடும். இவர் தனது சிறுவயதிலிருந்தே சமயச் சொற் பொழிவுகளை ஆற்றத்தொடங்கி விட்டார். தனது வாழ்க்கை முழுவதையும் சமயச் சொற்பொழிவு

ஆற்றுவதிலேயே கழித்தார். அது மட்டுமல்ல எத்தனையோ சமய நூல்களையும் எழுதியுள்ளார். தமிழில் பாடல்களாக இருக்கும் கந்தபுராணம், கந்தரநுபூதி, திருப்புகழ் போன்ற பல நூல்களுக்கு (புத்தகங்களுக்கு) மிக விரிவாக எல்லோரும் விரும்பிப்படிக்கும் வகையில் உரை நடையில் எழுதியுள்ளார்.

**கண்ணன்:** நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இவருக்கு முருகனிடத்தில் அதிக பக்தி இருக்கிறது போலத்தெரிகிறதே. கந்தபுராணம், கந்தரநுபூதி. திருப்புகழ் மூன்றும் முருகனின் பெருமையைக் கூறுகின்றன இல்லையா?

**தாத்தா:** நீ கெட்டிக்காரன் கண்ணா! உனக்கே இப்போது நிறையச் சயம அறிவு வந்துவிட்டதே.

**கண்ணன்:** அது எல்லாம் உங்களால் ஏற்பட்டது தான்.

**தாத்தா:** நல்லது, கிருபானந்தவாரியார் ஒரு சிறந்த முருக பக்தர் தான் அதனால் எல்லோரும் இவரைக் திருமுருக கிருபானந்தவாரியார் என்று அழைப்பார்கள். "கைத்தல நிறைகனி" என்ற திருப்புகழுடனேயே இவர் தனது சொற்பொழிவை ஆரம்பிப்பார். எமது சயத்தில் எந்தப் பொருளை எடுத்தாலும் அழகாகப் பேசுவார். கேட்பவர்களை சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கும். இவரது மதிநுட்பமான விளக்கங்கள் எவரையும் பிரமிக்கவைக்கும். அதனால் இவரது சொற்பொழிவைக் கேட்க மக்கள் பல ஊரிலிருந்தும் ஆயிரக்கணக்காக் வருவார்கள்.

**கண்ணன்:** அப்படியா தாத்தா? இவர் தமிழீழத்தவரா?

தாத்தா: இல்லைக் கண்ணா! இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். இருந்தாலும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஏன் இலண்டனுக்குக் கூட வந்திருக்கின்றார்.

**கண்ணன்:** அப்போ நீங்கள் ஏன் என்னைக் கூட்டிப்போகவில்லை.?

**தாத்தா:** நீ அப்போ சின்னக் குழந்தையாச்சே? ஆனபடியால் உனக்கு ஞாபகம் இல்லை. கிருபானந்தவாரியார் இறைவனடி சேர்ந்து பத்து வருடங்களாகின்றன.

**கண்ணன்:** இறைவனடி சேர்ந்தார் என்றால் என்ன தாத்தா?

**தாத்தா:** இறைவன் மீது மிகுந்த பக்தியுள்ளவர்கள், நிறையப்புண்ணியம் செய்தவர்கள் கடவுளைச் சேர்ந்துவிடுவார்கள். பாவம் செய்தவர்கள் கடவுளைப் பற்றிய சிந்தனையே இல்லாதவர்கள் மீண்டும் இந்த உலகத்தில் பிறந்து தமது செயல்களுக்கான பலனை அனுபவிப்பார்கள் என்று இந்து சமயம் கூறுகின்றது.

**கண்ணன்:** புண்ணியமென்றால் என்ன தாத்தா? பாவச் செயல்கள் எவை? சொல்லுங்கோ!

**தாத்தா:** புண்ணியம் செய்வது என்றால் 'அறம் செய்யவிரும்பு' என்று படித்திருக்கிறாய் அல்லவா? அதுவேதான் பிறருக்கு எம்மாலான நன்மைகளைச் செய்தல் அதாவது உணவு இல்லாதவர்களுக்கு உணவு கொடுத்தல், படிக்க வசதி இல்லாதவர்களுக்கு படிக்க உதவி செய்தல் நோயாளிகளுக்கும் வயோதிபர்களுக்கும் ஆதரவு அளித்தல் அநாதைப் பிள்ளைகளைக் காப்பாற்றல் இப்படி எவ்வளவோ செய்யலாம். இதற்கு மாறாக மற்றவர்களுக்குத் துன்பம் செய்வது பாவமாகும். கொலை, களவு செய்தல் பொய்சொல்லுதல் எல்லாம் இதற்குள் அடங்கும்.

**கண்ணன்:** அப்போ பாவம் செய்யாமல் இருப்பது மிகமிக முக்கியம். முடிந்தவரை மற்றவர்க்கு நல்லது செய்வதும் அவசியம் இல்லையா தாத்தா?

**தாத்தா:** ஆமாம். முற்றிலும் உண்மை. இதனைச் சிறுவர்கள் எல்லோரும் தமது குறிக்கோளாகக் கொண்டு கடைப்பிடிக்க வேண்டும்.

**கண்ணன்:** இதனை எப்படிக் கடைப்பிடிக்கலாம். எங்களுக்கு விளக்கமாக இதனைப் பள்ளியில் படிப்பிப்பதில்லையே?

**தாத்தா:** பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சிறுவயதிலிருந்தே நல்ல புத்தகங்களை வாசிக்கப் பழக்கவேண்டும். பெரியோர்களின் சொற்பொழிவைக் கேட்க வைக்கவேண்டும்.

**கண்ணன்:** சரி தாத்தா. நாங்கள் வெயில் போக முதல் வெளியில் கிளம்புவோம். நூலகத்திற்குப் போய் நல்ல புத்தகங்களை எடுத்து வருவோம்.

*************

# திருக்குறிப்புத் தொண்டநாயனார்

(மு.சிவராசா)

சொல்லாமல் செய்வர் பெரியர். சொல்லிச் செய்வர் சிறியர், சொல்லியும் செய்யார் கயவரே என்பது முது மொழி. குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம் என்றார் தமிழ்ப்புலவர். ஒருவரின் எண்ணம் அறிந்து, தேவை உணர்ந்து அவர் கேட்காமலேயே வேண்டியன செய்தல் மேன்மையானது. அதிலும் தந்தை, தாய், குரு, பெரியோர் இவர்களின் குறிப்புணர்ந்து செயலாற்றுதல் தலைசிறந்த பண்பாகும். அவ்வாறான பண்பைக் கடைப்பிடித்த பெருமையினால் குறிப்புத் தொண்டனார் என்ற காரணப் பெயர் கொண்ட ஒருவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராய்ப் போற்றப் படுகிறார்.

சகல வளங்களும் நிரம்பிய காஞ்சியம் பதியில் துணி வெளுத்துக் கொடுப்போர் குலத்தில் தோன்றினார் ஒருவர். அவர் இயல்பாகவே மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் இறைவனை வழிபடும் கொள்கையினார். சிவனடியார் தொண்டே சிவதொண்டு என்று அறிந்த அப் பெரியார், அடியவர்குறிப்பறிந்து அவர்களுடைய ஆடைகளை அழுக்கு நீக்கிவெளுத்துக் கொடுப்பதையே தொண்டாகக் கொண்டு ஒழுகி வந்தார். சிவனடியார்களின் ஆடை அழுக்கை நீக்கிக் கொடுப்பதன்மூலம் தம்முடைய ஆணவம், கன்மம் மாயை ஆகிய மும்மலங்களாம் அழுக்கை நீக்கி, தம் பிறவிப்பயனை அடையும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். செய்யும் தொழிலே தெய்வம் என்ற உண்மையை மனத்தில் தாங்கி தாம் பிறந்த குலத்தொழியையே சாதனமாகக் கொண்டு ஈடேற முயன்றார். இவ்வடியவர் தாம் மேற்கொண்ட தொண்டில் கொண்டிருந்த ஈடுபாட்டையும், மனஉறுதியையும் உலகோருக்கு வெளிப்படுத்தவென இறைவன் ஒரு சோதனையை மேற்கொண்டார். அதன்படி ஒரு நாள் மெலிந்த தேகம் கொண்ட வயோதிப சிவனடியார் உருவில் அழுக்கேறிய கந்தைஉடுத்து, ஆதுவராய், திருக்குறிப்புத் தொண்டர் வீட்டுக்கு வந்தார். மெய்யெல்லாம் வெண்ணீறு சண்ணித்தும், கார்மேக நிறக்கந்தையோடும் வந்தவரை இன்சொல் கூறிவரவேற்ற தொண்டர் வந்த அடியவரின் குறிப்புணர்ந்து அவர் உடுத்திருந்த கந்தையைக் கழுவித் தோய்த்துத் தருவேன் தருக எனக் கேட்டார். வந்தவர் உடையைக் கொடுக்க மனமில்லாதவர் போல இது மிக்க அழுக்கேறியதாய் இருப்பினும் என்னிடம் வேறு உடை இல்லை என்பது மட்டுமன்றி குளிர்தாங்கும் நிலையில் என் உடம்பும் இல்லை. சூரியன் படுமுன் கழுவிக்கொடுப்பீராகில் தருகிறேன் என்றார். அவ்வாறே தருவதாகஉறுதிமொழிகூறி அழுக்காடையை வாங்கிக் குளக்கரை சென்றார் நாயனார். துணியை அவித்து தோய்க்கத் தொடங்கிய போது வானத்தில் மழை மேகம் படர்ந்தது. சிறிது நேரத்தில் மழையும் பெய்யத் தொடங்கியது. விரைவாகத் தேய்த்து முடித்த தொண்டர் ஆடையை உலர்த்த முயன்றார். பெருமழை பெய்யவே அவர் எண்ணம் நிறைவேறாமல் போயிற்று. மழை இப்போது விடும் என்றும் சிறிது நேரத்தில் விடும் என் நினைந்து நினைந்து ஏமாந்தார். பொழுது படுவதாயிற்று.

சிவனடியாருக்கு கூறிய உறுதி மொழி தவறிட்டதே. இரவில் குளிரில் துன்புறப் போகிறாரே. அவர் துன்பத்துக்கு நானே காரணமானேனே. என் மனம் மாழ்கி இனி உயிரோடிருத்தல் தகாது என்று தமது தலையை துணி தோய்க்கும் கல்லில் மோதி உயிர் நீக்க முனைந்தார். அத்தருணம் இறைவன் அன்பரின் தலை கல்லில் மோதாத வண்ணம் இடையே தமது திருக்கரத்தை நீட்டித் தடுத்தருளினார். இவ்வற்புதம் கண்டு வான் மழை பூமழை போலாயிற்று. சிவனார் உமையோடும் இடபாருடராய்த் தோன்றித் திருக்குறிப்புத் தொண்டரைத் தமது சிவலோகத்துக்கு அழைத்துக் கொண்டார்.

தமக்கென வாய்த்த தொழில் வழியிலேயே சிவதொண்டு ஆற்றலும் என்பது இந்நாயனார் நமக்குக் காட்டிய நல்வழி. இவர் போன்றே திருநீலகண்ட நாயனாரும், திருநாளைப் போவார் நாயனாரும் தம் தொழிலையே தொண்டாக்கி வாழ்ந்தனர். இந் நாயனார் தாம் மேற்கொண்ட தொண்டு காரணமாக அடியவர் துன்புறுவாரே என்ற வருத்தம் மேலிடத் தமது உயிரையே விடவும் முயன்றார். இவர் மனஉறுதி போற்றற் பாலது. இறைவன் கருணையை என்னென்பது.!

படமாடும் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடும் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடும் கோயில் நம்பர்க்கொன்றீயில்
படமாடும் கோயிற் பகவற்க தாமே - திருமந்திரம்

(படமாடும் கோயில்-திருக்கோயில், நடமாடும் கோயில்-சிவனடியார்)

******

# What are Vishnu's Dasavatharams?

Vishnu is the preserver of the cosmos, the keeper of universal laws, the sustainer of life, who resides in Vaikuntha, the highest heaven. He constantly participates in worldly affairs making sure all is well. When order prevails in the cosmos, he rests on the coils of Adi-Sesha, the serpent of time. When there is disorder, he mounts his eagle Garuda and battles with the forces of chaos. Vishnu descends from heaven incarnating as man or beast to set things right. The ten incarnations of Vishnu are

**1. The fish - Matsya**

Hayagriva an asura, who had gained power over the Devas, had taken the Vedas from Brahma and hid it in the Ocean. The Devas including Brahma pleaded with Vishnu to retrieve the Vedas and to put an end to the misery of devas. Lord Vishnu took the form of Fish and went into the ocean.

Sage Satyavrata, who was doing penance subsisting on water alone, making the ritual offering of water to God, he espied a tiny fish in the water he had scooped. When he tried to put it back into the river, it said "Save me from the big fish and I will save mankind". Feeling sorry for the little one, the sage took pity and took it into his kamandalum (Pitcher - a vessel to hold water) and went back to his hermitage. Overnight, the Fish grew too big to be in the Kamandalum. As the days passed, the fish kept growing in size. It had to be moved from the pot, to a pond, lake, river, and finally to an ocean.

. Hayagriva saw the gigantic fish approaching him and was overtaken by fear. He held the Vedas tightly in his mouth. But soon the Divine Fish slew him and recovered the Vedas and restored them to Brahma for him to resume the function of creation at the appropriate time.

The Fish told Sage Satyavrata, "Just a week from now, the ocean will rise and inundate the entire Universe for the dissolution of creation. At that time you will see a spacious boat approaching you. Do collect all the seeds, plants and animals required for the next spell of creation and get into the boat and await me. Take Vasuki, the Serpent, also with you. The Saptha Rishis (seven Sages) will also be with you"

As foretold by the divine fish, pralaya (deluge) set in and on the turbulent waters, a boat appeared. Sage Satyavrata, the Saptha Rishis and all the living creatures found haven in the boat. The Fish in the colour of gold and now with a horn came by and ordered that the boat be tied to its horn using Vasuki as a rope. While the boat floated safely on the rising and enveloping waters, Vishnu taught the Rishis the highest form of Truth. This collection of truth has come to us in the form of Matsya Purana.

[ The tale of the apocalyptic flood that destroyed the world also occurs in the Bible where the lucky survivor is known as "Noah". The people of ancient Mesopotamia also knew this tale. They called their Manu, "Ut-Napishtim". ]

**2. The turtle - Koorma**

The Devas and the Asuras decided to churn the ocean of milk. They believed that in it lay dissolved wonderful treasures. Vasuki, the king of serpents, served as their churning rope. Meru, the king of mountains, was used as the churning spindle. But no sooner was this cosmic churn set up, than it began to sink. Vishnu came to the rescue by taking the form of Koorma, the turtle. He placed Mount Meru on his back and kept the churn afloat.

As the churning continued fourteen magnificent treasures emerged from the ocean notably:

The poison Halahal. Nobody wanted this lethal liquid. So Shiva drank it. Parvati held Siva's throat and the poison stayed in the throat.. The poison turned his neck blue.

The wish-fulfilling tree Katpakaviruksham. The Yakashas became its guardians. Its branch bore every kind of fruit and flowers one wished for.

The wish-fulfilling cow Kamadhenu. The sages decided to take care of it. Its udders produced enough food to feed the whole universe.

The wish-fulfilling gem Chintamani. Some say Vishnu placed it on his crown. Others say that the Nagas hid it, in their subterranean realm.

The seven-headed flying horse Ucchaishrava. Bali, leader of the Asuras, took possession of this horse.

The six-tusked elephant Airavata. Indra made this beast his mount.

The conch of the conqueror Panchajanya. The demon that took possession of it was killed by Vishnu who turned the conch-shell into his

trumpet.
The bow of the king Saranga. It was given to the kings of earth.
The beautiful nymph Rambha. She knew how to pleasure the senses in 64 different ways. She won Indra's heart so he carried her off to Amaravati,
radiant city of the Devas.
The handsome moon-god Chandra. Every woman fell in love with him. He cast the spell of romance across the universe. The goddess of wine Varuni. She became the wife of Varuna, the ocean-god, and came to be loved by all creatures. The physician Dhanvantari. An incarnation of Vishnu, the enemy of disease, he brought with him Ayurveda, the science of healing.
The goddess of fortune Sri. Everybody wanted to marry her, but she chose Vishnu. She placed Vaijayanti, the garland of eternal victory, around his neck.
The elixir of immortality Amrita. The Asuras stole this much-sought-after drink. Vishnu, in the form of the enchantress Mohini, bewitched the demons so that while they admired her beauty, she poured the drink down the throats of the Devas

**3. The boar - Varaaha**

In periodical destruction of the world, once the earth sunk into the deep waters by demon Hiranyaksha. Lord Vishnu, the great preserver, taking the form of a boar, descended into the waters and drew up the earth with the help of his tusks. The extrication of the world from the deluge of sin is symbolised by this legend.

**4.The man-lion - Narasimha**

